பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 20.00

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 23 புதன்கிழமை (06.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 131



04
நகல் வழங்கவில்லை; அசல்தான் வழங்கினோம்



05
இந்தியாவுக்கு உலகக் கிண்ணத்தை விட்டுக்கொடுத்தது



10
எட்டாக் கனியாகுமா நாட்டின் அபிவிருத்தி?

உள்ளே மத்தியூஸின் வர்ணப்படம் இணைப்பு



உங்கள் உதயனுடன் தொடர்ச்சியாய் வீரர்களின் வர்ணப் படங்கள் எதிர்பாருங்கள்

## அரசின் வாக்குறுதிகள் காற்றில்; சபையில் சம்பந்தன் குற்றச்சாட்டு



### ஜனநாயகத்தை சூழ்ச்சியான முறையில் கையாள்வதை அனுமதியோம் என்கிறார்

கொழும்பு, ஏப்.06

ஜனநாயகத்தை சூழ்ச்சியான முறையில் கையாள்வதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஜனநாயகத்தை அரசு தனக்கு வேண்டிய வகையில் பயன்படுத்துவதற்கு ஜனநாயகம் அரசுக்கு மட்டும் சொந்தமானதல்ல. அரசும், அமைச்சர்களும் அளித்த வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் அரசுமீது குற்றஞ்சாட்டினார்.

இந்தியாவில் சிகிச்சை முடித்துக்

(19 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பகுதிகள் முழுவதும் கிழக்கில் நேற்றுத் தேடுதல்

### போர்க் காலம் போன்று நீண்ட நாள்களின் பின்

கொழும்பு, ஏப்ரல் 6

கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் நேற்று போர்க்கால அடிப்படையில் படையினர் பெரும் தேடுதல் நடத்தினர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இடம்பெற்ற இத்தகைய தேடுதல் நடவடிக்கையால் தமிழ் மக்களிடையே பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டன. கவச வாகனங்கள் சகிதம் பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட படையினரின் தேடுதலும் சோதனைகளும் மாலை வரையும் நீண்டது.

திருகோணமலையில் லிங்கநகர், பாலையூற்று, துவரங்காடு, ஈச்சிலம்பற்று, பூநகர், பூமரத்தடிச்சோலை, இலங்கை துறைமுகத்துவாரம் ஆகிய இடங்களிலும் -

மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை, களுதாவளை, பட்டிப்பளை, கரடியனாறு, புலிபாய்ந்தகல், வாகரை, சித்தாண்டி, அரசடித்தீவு, முனைக்காடு

(19 ஆம் பக்கம் பார்க்க)



தெற்காசிய நாடுகளின் பொலிஸ் தலைமை அதிகாரிகள் மாநாடு நேற்று கொழும்பில் ஆரம்பமானது. இதில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய, பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க இன்டர் போல் போன்று சார்க் போல் என்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

## மாமியாரை வெட்டி சரித்தார் மருமகன் பூநகரியில் நேற்று பரபரப்புச் சம்பவம்

### வெட்டுக் காயங்களுடன் மனைவி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப்.6

மருமகனின் கத்திவெட்டுக்கு இலக்கானதாகக் கூறப்படும் சம்பவத்தில் மாமியார் அந்த இடத்திலயே துடிதுடித்து உயிரிழந்தார். இந்தக் கொடூரச்சம்பவம் நேற்றுக்காலை பூநகரி பள்ளிக்குடாவில் இடம்பெற்றுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தாயான யோகராச சிவகலா(வயது-40) என்பவரே கழுத்தில் கத்தியால்

(19 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழருக்கு சம உரிமை: இந்தியா அழுத்தம் கொடுக்கிறது

சென்னை, ஏப். 06

அரசமைப்பைத் திருத்தி அதன் மூலம் தமிழர்களுக்கு சம உரிமை வழங்கும்படி இலங்கை அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகின்றது என்று தெரிவித்திருக்கிறார் காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி.

தமிழக சட்டமன்றத் தேர்தலை ஒட்டி காங்கிரஸ் மற்றும் திமுக தலைவர்கள் இணைந்து நடத்தும் பரப்புரையின் முதலாவது கூட்டம் நேற்று சென்னையில் இடம்பெற்றது:

அதில் உரையாற்றிய சோனியா, ''அயல் நாடுகளில் தமிழர்களின் பிரச்சினை போல் எமது இதயத்துக்கு நெருக்கமான விடயம்

(19 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகலில் ஆணின் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், ஏப். 06

மாதகல் கடற்கரையில் நேற்றுக் காலை ஆண் ஒருவரின் சடலம் சிதைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

மாதகல் மீனவர்கள் கொடுத்த தகவலை அடுத்து அங்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

அடையாளம் காணமுடியாத வகையில் சடலம் சிதைந்த நிலையில் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மூன்று அல்லது நான்கு நாள்களுக்கு முன்னர் இறந்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அடையாளம் காணக்கூடிய வகையில் உடைகளோ அல்லது வேறு தடயங்களோ இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.(19 ஆம் பக்கம் பார்க்க)

# மாநகர சபைக் கூட்டத்தில் நேற்றுப் பெரும் அமளி துமளி

### நம்பிக்கையில்லாத் தீர்மானத்திலிருந்து நூலிழையில் தப்பினார் முதல்வர்

யாழ்ப்பாணம், ஏப். 06

யாழ். மாநகர சபையின் நேற்றைய கூட்டம் ஊழல் குற்றச்சாட்டுக்களால் எழுந்த சர்ச்சைகளால் பெரும் அமளி துமளியில் முடிந்தது.

சபையின் கடந்த மாதத்துக்கான கூட்டம் நேற்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. முதல்வர் தலைமையில் நேற்றைய கூட்டம் ஆரம்பமானது.

தொடக்கத்திலேயே, யாழ். நகரில் சபை அமைக்க உள்ள 5 மாடி வர்த்தகத் தொகுதியில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பான பிரச்சினை பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இது தொடர்பில் முதல்வர் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். அதில் அவர் உதயன் மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கி வசைமாரி பொழிந்தார்.

நகரின் மத்தியில் அமைய உள்ள 5 மாடி வர்த்தகத் தொகுதி தொடர்பான தகவல்களை உதயன் முற்றிலும் தவறாக வெளியிட்டது என்று குற்றஞ்சாட்டிய அவர் பொய்களையும் கட்டுக் கதைகளையும் கட்டவிழ்த்து விடுவதே உதயனுக்கு வேலை என்றும் சீறிப் பாய்ந்தார்.

முதல்வரின் இந்தக் கருத்தை எதிர்க் கட்சியினர் காட்டமாக எதிர்த்தனர். வர்த்தகத் தொகுதி விவகாரத்தில் முறைகேடுகளும் ஊழல்களும் இடம்பெற்றிருக்கின்றன என்று ஆணித்தரமாகத் தெரிவித்தனர் அவர்கள்.

(19 ஆம் பக்கம் பார்க்க)

## உதயனை வெளியேற்றும் முயற்சி நேற்றுத் தோல்வி

யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற முறைகேடுகளை வெளியிட்டதற்காக உதயன் பத்திரிகையாளரை சபைக் கூட்டத்தில் இருந்து வெளியேற்ற ஆளும் தரப்பு நேற்று மேற்கொண்ட முயற்சி கடும் எதிர்ப்புக் காரணமாகக் கைவிடப்பட்டது.

கூட்டம் தொடங்கியதும் முதல்வர் உதயன் மீது வசைமாரி பொழிந்தார். தொடர்ந்து ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான மங்களநேசன், விஜயகாந்த், இளபோடாலியஸ் ஆகியோரும் உதயன் பத்திரிகை தவறான செய்திகளையே வெளியிடுகிறது என்று குற்றஞ்சாட்டி அதன் செய்தியாளரை வெளியேற்ற வேண்டும் என்றனர். (19 ஆம் பக்கம் பார்க்க)

உதயன்
தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவும் சாத்தியம் உள்ளது.

### கடைத்தொகுதி நிர்மாண விவகாரம்

# யாழ். மாநகர சபையில் ஊழல் ஏதுமில்லை தமிழ் மக்களின் சுபீட்சத்துக்காகவே அரும்பாடு



## 'உதயன்' தவறான வழியை காட்டுகிறது என்கிறார் மேயர்

யாழ்ப்பாணம், ஏப்.6

தமிழ் மக்களின் சுபீட்சமான எதிர்காலத்துக்காகவே அனைத்து வேலைத்திட்டங்களையும் யாழ். மாநகரசபை முன்னெடுக்கிறது. இதற்கு எதிராக 'உதயன்' மக்களைத் தவறான முறையில் வழி நடத்துகிறது. குறிப்பாக யாழ். நகர கட்டடத் தொகுதி நிர்மாணிக்கும் பணிகளிலும் ஊழல்களோ, முறைகேடுகளோ இல்லை.

யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கடந்த 27.10.2010 இல் நடைபெற்ற கூட்டறிக்கை 37 இக்கு அமைய, யாழ். நகரில் கடைத் தொகுதியை அமைக்க அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டிருந்தனர்.

திட்டமிடல் பிரிவு, கேள்விச் சபை ஆகியவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டு தேசிய பத்திரிகை ஒன்றில் (அரசசார்பு) விளம்பரம் செய்யப்பட்டது. அதன்படி ஒருவரே கேள்வி சமர்ப்பித்தார்.

இந்தக் கட்டடத்தை அமைக்க மாநகரசபை ஒருசதமும் செலவிடத் தேவையில்லை. வெளிநாட்டு முதலீட்டாளரினால் கட்டடம் அழகுற அமைக்கப்படவுள்ளது. இந்த விடயத்தில் ஊழல் ஏதும் இல்லை.

'உதயன்' பத்திரிகை வெளியிட்ட விடயத்தின் உண்மைத் தன்மையை நிரூபிக்கவேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரின் தவறான புரிந்துணர்வு, கசப்புணர்வு காரணமாகவும், முன்னாள் ஆணையாளரின் வழிகாட்டலுடனுமே 'உதயன்' பத்திரிகை தவறான செய்திகளை வெளியிட்டுவருகிறது.

இணக்க அரசியல் மூலம் எமது அபிவிருத்திகளை முன்னெடுத்து தமிழ் மக்களின் சிறப்பான எதிர்காலத்துக்காக அரசுடன் இணைந்து ஜனநாயக ரீதியில் வெற்றிபெற, எதிரணி எம்முடன் இணைந்து செயற்பட வேண்டும் எனப் பகிரங்கமாக அழைக்கிறேன்.

புதிய ஐந்து மாடிக் கட்டடத் தொகுதி அழகுற அமையும். இதில் முறைகேடுகள் எதுவும் இல்லை. 'உதயன்' பத்திரிகை தனது சுய லாபத்துக்காக மக்களைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்கிறது. முன்னாள் ஆணையாளரின் ஊழல்களையும் விரைவில் வெளிப்படுத்துவோம் - என்றார். (ஒ-ஐ-7)

# நகர கடைத்தொகுதிக்கான அறவீட்டில் பெறப்பட்ட கறுப்புப் பணம் 11 கோடி



## மாநகரசபை ஊழலை அம்பலப்படுத்துகிறார் விந்தன்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.நகரின் மத்தியில் அமையவுள்ள கட்டத் தொகுதியின் விற்பனை நடவடிக்கைகையில் பெரும் மோசடியும் - ஊழல்களும் இடம்பெற்றுள்ளன என்று மாநகர சபையின் நேற்றைய மாதாந்தக் கூட்டத்தில் அடித்துக் கூறினார் எதிரணி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம்.

இதுவரை 14 கடைகளுக்குமான அறவீடுகளில் மொத்தம் 11 கோடி 20 லட்சம் ரூபா கறுப்புப் பணமாகப் பெறப்பட்டுள்ளது என்றும் அதற்கான தகுந்த ஆதாரங்கள் கைவசம் இருக்கின்றன என்றும் விந்தன் சபையில் அறிவித்தார்.

கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

குறிப்பிட்ட கட்டடத் தொகுதியில் ஒரு கடைக்கு ஒரு கோடி 90 லட்சம் ரூபா ஒரு வருடத்துக்கென அறிவிடப்பட்டுள்ளது. ஆனால் அவருக்கு 1 கோடி 10 லட்சம் ரூபாவுக்கே பற்றுச் சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துத் தனியார் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் விசாரித்ததில் இந்தத் தொகுதியில் இடம்பெறும் கடை ஒன்றுக்கு ரூபா 10 லட்சம் மட்டுமே செலவாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. நான்கு மாடிகளிலும் மொத்தம் 56 கடைகள் அமையவுள்ளன.

இதுவரை 5 கடைகளுக்கு ரூபா 50 லட்சம் வீதம் ஒப்பந்தகாரரால் இரகசிய உடன்படிக்கை மூலம் ரூபா இரண்டரைக் கோடி அறவிடப்பட்டுள்ளது. இந்த மோசடி நடவடிக்கை இடைத்தரகர்கள் ஊடாக கனகச்சிதமாக நடந்து வருகின்றது.

இந்த நடவடிக்கைகளால் யாழ்.மாநகர சபைக்குப் பல கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் எமது மக்களுக்கும் பேரிழப்பு என்பதை இங்கு சுட்டிக் காட்டுகின்றேன் - என்றார் விந்தன். (ஒ-7)

# வீடமைப்பு அதிகார சபை கல்முனை அலுவலகத்தை அம்பாறையுடன் இணைப்பதை எதிர்த்துப் போராட்டம்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கல்முனை நகர அலுவலகத்தை நிர்வாக ரீதியாக அம்பாறை அலுவலகத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளைக் கண்டித்தும், கல்முனை அலுவலகத்தின், அம்பாறையுடன் இணைக்கப்பட்ட கணக்குப் பிரிவை மீண்டும் கல்முனையில் இயங்க வைக்குமாறு கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடத்தப்படவிருக்கின்றது.

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளது.

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியின் முகாமைத்துவ சபைக்கூட்டம் முன்னணியின் தலைவர் எஸ்.லோகநாதன் தலைமையில், கல்முனை சனச மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது இக்கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்துவதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களுக்குப் பல வருட காலமாக அளப்பரிய சேவைகளை ஆற்றிவரும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கல்முனை அலுவலகத்தை நிருவாக ரீதியாக அம்பாறை அலுவலகத்துடன் இணைப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் திரைமறைவு நடவடிக்கைகள் குறித்து கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டு கண்டனத்தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டதுடன், இந்த அலுவலகக் கணக்குப் பிரிவை மூடி அம்பாறை அலுவலகத்துடன் இணைத்துள்ளமைக்கும் கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்த நடவடிக்கைகளைக் கண்டிப்பதுடன், உடனடியாக இத்தகைய முனைப்புகளைத் தடுத்து நிறுத்துமாறு கோரியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது. (த-30)

## மகளிர் தினவிழா

தென்மராட்சி, ஏப்.6

தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் தின விழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1 மணிக்குப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் கலந்து கொள்வார்.

பிரதேச மாதர் கிராம அபிவிருத்திக் கழகங்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-207)

# வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு விரைவில் தேசிய செயற்றிட்டம்

கொழும்பு,ஏப்.6

வீதி விபத்துக்களைக் குறைக்கும் தேசிய செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

வீதி விபத்துக்கள் காரணமாகத் தினமும் உயிரிழப்போரின் எண்ணிக்கை அதிகரித்து வருவது மற்றும் விபத்துக்களினால் அங்கவீனர்களானோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக வீதி விபத்துக்களைக் குறைப்பது தொடர்பாகச் தேசிய செயற்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக அரசின் சிரேஷ்ட அமைச்சரான பீ. தயாரத்ன தெரிவித்துள்ளார். அதிவேகப் பெருந்தெருக்கள் நிர்மாணிக்கப்படுதல், மோட்டார் வாகனங்களின் அதிகரிப்பு, வேகமாக வாகனங்கள் செலுத்தப்படுதல் என்பவை வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்குக் காரணிகளாக உள்ளதாக அமைச்சர் சுட்டிகாட்டியுள்ளார்.

இது தொடர்பான இடைக்கால அறிக்கையொன்றும் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். வீதி விபத்துக்களைக் குறைத்துக் கொள்வது தொடர்பான அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டும் மாநாடொன்றும் அடுத்த மாதம் ஜனாதிபதியின் தலைமையில் கொழும்பில் இடம்பெறவுள்ளது. (த-22)

# சொகுசு கார்களை இறக்குமதி செய்ய மேலும் 24 எம்.பிக்களுக்கு அனுமதி

கொழும்பு,ஏப்.6

முன்னர் மாகாணசபை உறுப்பினர்களாக இருந்து தற்பொழுது நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கும் 24 எம்.பிக்களுக்கு சொகுசு கார்களை தீர்வை சலுகை திட்டத்தின்கீழ் இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்க விருப்பதாகத் தெரிய வருகின்றது. இந்த உறுப்பினர்கள் மாகாண சபை உறுப்பினர்களாக இருந்தவகையிலும் இவ்விதமான சலுகைகளைப் பயன்படுத்தியவர்களாவர் என்று கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஐந்து வருடங்களுக்கு ஒருதடவை தீர்வை சலுகைகளுடன் வெளிநாடுகளிலிருந்து சொகுசு கார்களை இறக்குமதி செய்து கொள்ள வசதியிருக்கின்றது.

கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொகுசு கார்களை இறக்குமதி செய்து கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டபோது மேற்கண்ட 24 உறுப்பினர்களும், ஏற்கனவே மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தபோது இந்தச் சலுகையைப் பெற்றுக் கொண்டவர்கள் என்ற முறையில் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது இந்த உறுப்பினர்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்றின் பேரில் அவர்கள் ஐந்து வருட தவணையை நிறைவேற்றாத விடத்தும் சொகுசு கார்களை இறக்குமதி செய்து கொள்ள அனுமதி வழங்குவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

இவ்விதம் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதி அட்டைகளை அரச தரப்பு மற்றும் எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலர் பெரும் தனவந்தர்களுக்குப் பெருந்தொகைப் பணத்துக்கு விற்றிருப்பதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சர்வதேசத்துக்கு இந்த அவசரத்தனம் ஏன்?

வெளிநாடுகளில், குறிப்பாக மேலைநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைச் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பக்கூடாது என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

சுவிற்ஸர்லாந்தில் பல மனித உரிமை அமைப்புகளின் ஆதரவு, அனுசரணையுடன் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டிருக்கிறது. சுவிஸ் தலைநகர் பேர்ணில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில், அந்நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் யோசனையைக் கைவிட்டு, அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் அரச நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரப்பட்டது.

சுவிஸ் நாடாளுமன்றத்துக்கு முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், அச்சுறுத்தல்களுக்கான இனங்களுக்கான சர்வதேச அமைப்பு, சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் பல மனித உரிமை அமைப்புகளும் சுவிஸின் அரசியல் கட்சிகளான சோஷலிசக் கட்சி, பசுமைக்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்; தமது ஆதரவைத் தெரிவித்தனர். இலங்கைத் தமிழர்களை நாடு கடத்தும் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று சுவிஸ் அரசாங்கத்தைக் கோரும் மகஜர் ஒன்றிலும் அவர்கள் கைச்சாத்திட்டனர்.

அதேபோன்று, பிரிட்டனிலும், அங்கு அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களை நாடுகடத்தக்கூடாது என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. பிரிட்டிஷ் அரசு நாடு கடத்தும் செயற்பாட்டில் வேகமாக செயற்பட முனைந்துள்ளது.

முன்னர் இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தை மனித நேயத்துடனும் மனிதாபிமானத்துடனும் நோக்கிய தொழிற்கட்சி, இப்போது அந்த நிலையை மாற்றி உள்ளது. அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவதில் அதிக முனைப்புக் காட்டி வருகிறது.

கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளும் இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் தமது முந்தைய போக்கைக் கைவிட்டு அவர்களைத் திருப்பி அனுப்புவதிலேயே அதிக ஈடுபாடு காட்டி வருகின்றன.

இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தில் இங்கு தமிழர்களில் மிகப் பெரும்பாலானோர் ஒரு மானிடனுக்கு உரிய வாழ்வதற்கான எல்லா உரிமைகளையும் இழந்து, தமது உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற இறுதிக்கட்ட வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது. அரசாங்கத்தின் அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பனவற்றின் கீழ் கொண்டு வரப்பட்ட ஜனநாயக விரோத சட்ட விதிகளால் பலர் குறிப்பாக இளம் வயதினர் வேட்டையாடப்பட்டனர்.

அந்த ஆபத்தை அங்கீகரித்து உலக நாடுகள் பலவும், இலங்கைத் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கித் தத்தம் நாடுகளில் புகலிடம் வழங்கின. அந்த நாடுகளின் அரசுகள் மனிதாபிமானத்துக்கும் மனித நேயத்துக்கும் மதிப்பளித்து உதவின. அந்த நன்றியைப் புலம் பெயர் தமிழ்மக்கள் அவர்களது வாழ்க்கையில் மறக்கமாட் டார்கள். இங்குள்ள அவர்களது உறவுகளும் மறக்கமாட்டார்கள்.

2009 மே மாதத்தில் இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிந்துவிட்டது. இங்கு அமைதி திரும்பி உள்ளது; இயல்பு நிலையும், சகஜ வாழ்க்கையும் மீண்டும் துளிர்த்துவிட்டன. நாட்டின் எந்தப் பகுதிக்கும் எந்தப் பிரசையும் சென்றுவர முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மேல் குறிப்பிடப்பட்டவை இலங்கையின் மேற்படலப் போர்வை. அந்த மேற்படலத்துக்குக் கீழே உள்ளவை, குறிப்பாகத் தமிழ் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை நிலை புகை படிந்தவை. தமிழ் மக்கள் தமக்குச் சேரவேண்டிய ஜனநாயக உரிமைகளை அரை குறையாகவேனும் அனுபவிக்கமுடியாத துரதிஷ்டம்.

சமாதானம், அமைதி, சம உரிமை, சமநீதி, சமத்துவம் அச்சமில்லாத வாழ்வு, நிலையான சுதந்திரம், பாகுபாடற்ற சட்டம் ஒழுங்கு மற்றும் அகில உலக மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பூரணத்துவமான மனிதாபிமான உரிமைகள் என்பன தமிழர் பிரதேசங்களில் முகிழ் நிலையில் தானும் இல்லை. அவை தமிழ் மக்களுக்குக் கிடைத்துவிட்டதாக அரச தரப்பினர் வாயாலும் எழுத்தாலும் வெளிப்பகட்டுக் காட்டினாலும் உள்ளே உள்ள சூத்தைகளை, சர்வதேசம் - வெளிநாடுகள் - இன்னும் கண்டுகொள்ளவில்லை. வெளியில் பூசப்பட்ட வர்ணப் பூச்சுகளைப் பார்த்து தமிழர்களுக்கு போரின் பின்னர் எல்லா உரிமைகளும் வாழ்க்கை வசதிகளும் கிடைத்துவிட்டன என்ற பொய்த் தோற்றத்தை அவை நம்புகின்றன; உள்வாங்கி வருகின்றன.

அதனாலேயே, தஞ்சம் கேட்டுத் தங்கள் நாடுகளில் தங்கி வாழும் இலங்கைத் தமிழ் மக்களை வெளியேற்ற அவை முனைந்துள்ளன. உண்மை நிலைமைகளைக் கண்டறிய இரகசிய விஜயங்களை மேற் கொள்வது குறித்து அவை ஏன் ஆர்வம் காட்டவில்லை? கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்ற வகைப் பாத்திரத்தில் நடிக்க நாட்டம் கொண்டுள்ளனர். தங்களை மனிதநேயம் கேட்டு நாடிச் சென்ற இலங்கைத் தமிழர்களை படுகுழியில் உடனடியாக விழுத்த அந்நாடுகள் அவசரப்படுவது தான் ஏனோ?

# மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தமிழில் முறைப்பாடு செய்ய வசதி

யாழ்ப்பாணம், ஏப்.6

மானிப்பாய்பொலிஸ்நிலையத்தில் வெகுவிரைவில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் முறைப்பாட்டுப் பிரிவில் சேவைக்கு அமர்த்தப்படுவர். இதன்மூலம் பொது மக்கள் தமது முறைப்பாடுகளைத் தமிழில் மேற்கொள்ள முடியும் என மானிப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டுப் பிரிவில் சிங்கள மொழியில் பொதுமக்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர் எனச் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சமூக ஆர்வலர்களால் கருத்து முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்ப் பிரதேசங்களில் பொதுமக்களின் நன்மை கருதித் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் இணைக்கப்பட்டுள்ளார்கள். தற்போது அவர்களுக்குச் சிங்கள மொழித் தேர்ச்சியும் ஏனைய பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அவர்களுக்குரிய பயிற்சிக்காலம் முடிவடைந்தவுடன் பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப் பிரிவுகளில் அவர்கள் கடமையில் அமர்த்தப்படுவார்கள் - என்றார்.

(த-313)

# சகல வாகனங்களின் விலைகளும் தெளிவாகக் காட்சிப்படுத்த வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப்.6

சகல வாகனங்கள் இறக்குமதியாளர்களும் விற்பனையாளர்களும் தமது வியாபார நிறுவனங்களில் அல்லது அவற்றை விற்பனை செய்யும் நிலையங்களில் விற்பனைக்காக வைத்திருக்கும் சகல தர வாகனங்களின் விற்பனை விலையைத் தெளிவாகத் தெரி யக் கூடியதாகக் காட்சிப்படுத்த வேண்டும் என பாவனையாளர் அதிகார சபைத் தலைவர் பொது அறிவித்தல் மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

அவ்வாறு செயற்படாத வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க அதிகார சபை முனையும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2003 ஆம் ஆண்டின் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 26 ஆவது பிரிவின் கீழ் வர்த்தக நிலையங்கள் தமது தொழில் இடத்தில் விற்பனைக்காக வைத்திருக்கும் எல்லாப் பண்டங்களின் விலைகள் விலைபட்டியல் மூலம் தெளிவாகத் தெரியக் கூடியதாகக் காட்சிக்கு வைத்திருத்தல் அவசியம் எனக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சட்டம் தற்சமயம் வாகனங்கள் விற்பனை நிலையங்களுக்கும் அமுலாக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-122)

# வலி.வடக்கில் கிணறுகளை புனரமைக்க 11 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஏப்.6

வலி.வடக்கில் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்பட்ட இளவாலை வடமேற்கில் உள்ள கிணறுகளைப் புனரமைக்க 'வைகோ' நிறுவனம் 11 லட்சத்து 10 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

இந்தப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று வலி.வடக்குப் பிரதேச செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இளவாலை வடமேற்குப் பகுதியில் இதுவரை சுமார் 100 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள்மீள்குடியேறியுள்ளன.

இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது அங்குள்ள கிணறுகளைப் புனரமைக்க 'வைகோ' நிறுவனம் நிதியுதவிகளை வழங்கியுள்ளது.

ஒவ்வொரு கிணறும் தலா ஒரு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன. இதற்கான பணிகள் அடுத்த வாரம் முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் - என்றார் அவர்.

(த-9)

# 'கடவுள் வடித்த கண்ணீர்' திருப்பாடுகளின் காட்சி

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகையான 'கடவுள் வடித்த கண்ணீர்' என்னும் திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் ஆரம்பமாகித் தொடர்ந்து 17 ஆம் திகதி வரை ஐந்து நாள்களுக்கு நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகவுள்ள திருப்பாடுகளின் காட்சி வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். 14 ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு தினமானதால் அன்றைய தினம் ஆற்றுகை இடம்பெறாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் அதிகமான கலைஞர்கள் பங்கேற்று நடிக்கின்ற இந்த ஆற்றுகைக்காகக் கடந்த ஆண்டுகளைப் போல் இம்முறையும் 150 அடி நீளமான விசேட மேடை அமைக்கப்பட்டு வருகின்றது.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருள்திரு.நீ.மரிய சேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகிய இந்த ஆற்றுகைக்கு திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் மீள்வடிவம் கொடுத்து நெறியாள்கை செய்கின்றார். இதற்கான இசையமைப்பை இசைத் தென்றல் ம.யேசுதாசன் வழங்குகின்றார்.

திருமறைக் கலாமன்றம் 1963 ஆம் ஆண்டு முதல் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றி வருகின்றது. இயேசுவின் திருப்பாடுகளின் வரலாற்றை ஒவ்வோர் ஆண்டும் அந்தக் காலத்தின் சமூகச் சூழல்களுடன் இணைத்துத் தயாரிப்பதால் இந்த ஆற்றுகை ஆழ்ந்த அர்த்தம் பொதிந்ததாக அமைவதுடன், மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(த)

# ஐ.சி.சி. ஒருநாள் போட்டியின் தரப்படுத்தல் முடிவுகள் வெளியீடு

டுபாய்,ஏப்.6

ஐ.சி.சி ஒரு நாள் போட்டி தரவரிசையில் இந்தியா 121 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் இலங்கை 118 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

ஆஸ்திரேலியா காலிறுதியிலேயே உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறிய போதும் 128 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

இறுதி ஆட்டத்தில் தோற்ற இலங்கை அணி 118 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், தென்னாபிரிக்கா 116 புள்ளிகளுடன் 4 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 105 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்திலும் உள்ளன.

பாகிஸ்தான், நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள், பங்களாதேஷ் அணிகள் முறையே 6, 7, 8, 9 ஆவது இடங்களில் உள்ளன.

**துடுப்பாட்ட தரவரிசையில்...**

தென்னாபிரிக்காவின் அம்லா, ஏ.பி. டிவில்லியர்ஸ், இலங்கையின் டில்ஷான், சங்கக்கார, இங்கிலாந்தின் ஜொனாதன் ரொரட் ஆகியோர் முதல் 5 இடங்களில் உள்ளனர்.

இந்திய வீரர் ஹோக்லி 6 ஆவது இடத்திலும், இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி 8 ஆவது இடத்திலும், சச்சின் 9ஆவது இடத்திலும், கம்பீர் 10ஆவது இடத்திலும், யுவராஜ் 17ஆவது இடத்திலும் உள்ளனர்.

**பந்து வீச்சு தரப்படுத்தலில்...**

நியூசிலாந்து அணித்தலைவர் வெற்றோரி முதலிடத்திலும், சிம்பாப்வே வீரர் பிரைஸ் இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்தின் ஸ்வான் 3 ஆவது இடத்திலும், தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன் 4 ஆவது இடத்திலும் உள்ளனர். இந்திய வீரர் ஹர்பஜன் சிங் 18 ஆவது இடத்தில் உள்ளார்.

**சகலதுறை ஆட்டக்காரர் தரவரிசையில்...**

பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல்ஹசன் முதலிடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஷேன் வொட்ஷன் இரண்டாவது இடத்திலும், பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் யுவராஜ் 4ஆவது இடத்தில் உள்ளார். (15)

# நகல் வழங்கவில்லை; அசல்தான் வழங்கினோம்



டுபாய்,ஏப்.6

உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியனான இந்திய அணிக்கு வழங்கப்பட்ட சம்பியன் கிண்ணம் அசல் கிண்ணமே எனவும் மாதிரிக் கிண்ணம் அல்ல எனவும் சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸில் (ஐ.சி.சி.) தெரிவித்துள்ளது. மும்பை சுங்கப்பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டது வேறொரு கிண்ணம் எனவும் ஐ.சி.சி. கூறியுள்ளது.

சனிக்கிழமை மும்பையில் நடைபெற்ற இலங்கையுடனான இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்ற இந்திய அணிக்கு வழங்கப்பட்ட கிண்ணம் நகல் கிண்ணமென்றே எனவும் அசல் கிண்ணம் தீர்வை செலுத்தப்படாததால் மும்பை சுங்கத் திணைக்கள அலுவலகத்தில் உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில், ஐ.சி.சி. மற்றும் இந்திய கிரிக்கெட் சபை நகல் கிண்ணத்தை எம்.எஸ். டோனி தலைமையிலான இந்திய அணிக்கு வழங்கிவிட்டதாகக் கூறி, இந்திய அணியின் முன்னாள் வீரர்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டிருந்தனர்.

இதையடுத்தே இந்திய அணிக்கு வழங்கப்பட்டது அசல் கிண்ணம்தான் என ஐ.சி.சி. அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

'தவறான விஷமத்தனமான ஊடக செய்திகளுக்கு முரணாக, சனிக்கிழமை வான்டே அரங்கில் அசல் கிண்ணமே இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகளில் சம்பியனாகும் அணிக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அசல் கிண்ணம்தான் என்பதை ஐ.சி.சி உறுதிப்படுத்துகிறது.

அது நகல் கிண்ணமா என்ற கேள்விக்கு இடமில்லை. இந்தியாவுக்கு வழங்கப்பட்ட கிண்ணத்தில் 2011 உலகக் கிண்ண சுற்றுப்போட்டிக்கான பிரத்தியேக இலச்சினையும் பொறிக்கப்பட்டுள்ளது. 14 அணிகளும் இந்த கிண்ணத்திற்காகத்தான் விளையாடின.

மும்பை சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட கிண்ணம் டுபாயில் ஐ.சி.சி. தலைமையகத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் நிரந்தர கிண்ணமாகும். அதில் 2011 உலகக்கிண்ண சுற்றுப்போட்டி இலச்சினைக்குப் பதிலாக ஐ.சி.சி. இலச்சினையையே கொண்டுள்ளது. அந்தக் கிண்ணம் திங்கட்கிழமை மீளப் பெறப்பட்டு டுபாயிலுள்ள ஐ.சி.சி. தலைமையகத்திற்கு கொண்டு செல்லப்படும்' என ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இதேவேளை, தாம் தடுத்துவைத்தது அசல் கிண்ணமா நகல் கிண்ணமா என்பது தமக்குத் தெரியாது என இந்திய சுங்க அதிகாரிகள் ஒப்புக் கொண்டுள்ளனர். எவ்வாறெனினும் 35 சதவீத சுங்க வரி செலுத்தப்பட்டால் அந்தக் கிண்ணத்தைக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்படும் என இந்திய சுங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாகச் சம்பியன் கிண்ணத்தை ஐ.சி.சி. அதிகாரிகள் பல மாதத்திற்கு முன்னரே மும்பைக்கு கொண்டுவந்து சேர்த்திருக்கவேண்டும். சம்பியன் அணிக்கு வழங்குவதற்கு அசல் கிண்ணம் இல்லை என்பது நம்பமுடியாமலிருக்கிறது என இந்திய அணியின் முன்னாள் வீரர் அருன் லால் கூறியிருந்தார்.

மற்றொரு முன்னாள் வீரரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கீர்த்தி ஆஸாத் கருத்துத் தெரிவிக்கையில், ஐ.சி.சி. 45 கோடி ரூபா வரிவிலக்கு பெற்றது. 600 கோடி ரூபா சம்பாதித்தது. அதற்கு 22 லட்சம் ரூபா சுங்கத் தீர்வை செலுத்த முடியவில்லை. சரத் பவார் (ஐ.சி.சி.தலைவர்) குறித்து நான் ஏமாற்றமடைகிறேன்' என கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (15)

திறப்பு விழா

யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக கணனி மயப்படுத்தப்பட்ட

WHEEL ALIGNMENT

துர்க்கா வாகனத் திருத்தகம்

இன்று (06.04.2011) புதன்கிழமை மு.ப 10மணிமுதல் 11 மணிவரை உள்ள சுபவேளையில் அதி நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கணனி மயப்படுத்தப்பட்ட WHEEL ALIGNMENT யாழ்ப்பாணத்தில் முதன் முறையாகத் திறந்து வைக்கப்படுகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வாகன உரிமையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

- Wheel Alignment.
- Wheel Balancer.
- E.F.I. Methods Vehicle repairs.
- Fuel System Cleaner
- Full Vehicle Maintaining
- All type (Diesel or Petrol) Vehicle Mechanic )

துர்க்கா வாகனத் திருத்தகம்,
இல. 16A, சிவன் வீதி, திருநெல்வேலி.




(புதிய பழைய வாகனங்களுக்கான சில்லு சமநிலை சீராக்கல்)

உரிமையாளர் : தங்கராஜா சிறீகாந் (காந்தன்), தொலைபேசி இலக்கம் : 077 9785790

# இந்திய நண்பர்களுக்காக உலகக் கிண்ணத்தை இலங்கை விட்டுக்கொடுத்தது

மஹிந்த



கொழும்பு, ஏப்.6

உலகக்கிண்ணத்தை இந்திய நண்பர்களுக்காக இலங்கை அணி விட்டுக் கொடுத்ததாக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மும்பையில் நடைபெற்ற உலகக்கிண்ணத் துடுப்பாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இலங்கை அணி இந்தியாவிடம் தோல்வியடைந்தது. தோல்வியுடன் நாடு திரும்பிய இலங்கை அணியினருக்கு நேற்று முன்தினம் மாலை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் விருந்தளித்தார். இதன்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்தியாவில் உள்ள 120 கோடி மக்களின் மகிழ்ச்சிக்காக இலங்கையில் உள்ள 2 கோடி மக்கள் உலகக் கிண்ணத்தை விட்டுக் கொடுத்துள்ளனர். சிறியதொரு எமது நாட்டின் மக்கள் இந்திய நண்பர்களுக்காக உலகக் கிண்ணத்தை விட்டுக் கொடுத்துப் பின்வாங்கினர் என்பதை இந்திய நண்பர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இலங்கை அணியினர் பெருந்தன்மையுடன் தோல்வியடைந்தனர். இந்த இறுதி ஆட்டத்தில் வெற்றி பெறாது போனாலும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது மிகப்பெரிய விடயம். இதன்மூலம் எமக்குப் பெருமை தேடித் தந்துள்ளீர்கள் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை ஜனாதிபதியின் மனைவி சிராந்தி ராஜபக்ச, வீரர்கள் அனைவருக்கும் சிறப்புப்பரிசுகளை வழங்கினார். உலகக்கிண்ண இறுதிப்போட்டியைக் காண மும்பை சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ , இலங்கை அணி தோல்வியுற்றதும் அவர்களை அங்கேயே விட்டு விட்டு இரவோடு இரவாக நாடு திரும்பியிருந்தார்.

அத்துடன் கொழும்பு திரும்பிய இலங்கை அணிக்கு சுதந்திர சதுக்கத்தில் அளிக்கப்பட்ட பெருமெடுப்பிலான வரவேற்பில் இலங்கை அரசின் எந்த வொரு அமைச்சரும் கூட கலந்து கொள்ளவில்லை. கிரிக்கெட் விளையாட்டு அரசியலாக்கப்பட்டு விட்ட தாக ஐ.தே.க குற்றம்சாட்டியிருந்த நிலையிலேயே நேற்றுமுன் தினம் அலரி மாளிகையில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(15)

# உலகப் பதினொருவர் அணியின் தலைமை சங்காவுக்கு

டுபாய், ஏப்.6

உலகக் கிண்ணத் தொடரில் அசத்திய வீரர்களைக் கொண்டு தேர்வு செய்யப்பட்டுள்ள உலகப் பதினொருவர் ஒருநாள் அணியில் இந்தியாவின் சச்சின், யுவராஜ் சிங், சகிர்கான் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

உலகக் கிண்ணத்தை வென்ற அணித்தலைவர் டோனிக்கு இதில் இடம் வழங்கப்படவில்லை. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில்(ஐ.சி.சி) சார்பில் உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாக சாதித்தவர்கள் திறமையின் அடிப்படையில் உலகப் பதினொருவர் ஒருநாள் அணி தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதில் இந்தியா சார்பில் சச்சின், யுவராஜ் சிங், சகிர்கான் ஆகிய மூன்று பேர் இடம் பெற்றனர். அதிக பட்சமாக இலங்கை அணியில் இருந்து சங்கக்கார, ஜெயவர்தன, டில்ஷான், முரளிதரன் ஆகிய நான்கு வீரர்கள் தேர்வாகியுள்ளனர்.

தென்னாபிரிக்க அணியில் இருந்து இரண்டு, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணியில் இருந்து தலா ஒருவர் இதில் இடம்பெற்றுள்ளனர். அணியின் தலைமை பதவிக்கு மற்றும் விக்கெட் காப்பாளர் இடத்திற்கு டோனி, சங்கக்கார இடையே கடும் போட்டி இருந்தது. ஆனால் இந்தத் தொடரில் டோனி சரியானபடி துடுப்பெடுத்தாடாததால் சங்கக்கார இந்த இடத்தை தட்டிச் சென்றார்.

சங்கக்கார(விக்கெட் காப்பாளர்/அணித்தலைவர்), சச்சின், யுவராஜ், சகிர்கான், ஜெயவர்த்தன, டில்ஷான், முரளிதரன், ஏ.பி.டி வில்லியர்ஸ், ஸ்ரெய்ன், வொட்ஷன் மற்றும் அப்ரிடி மற்றும் 12 ஆவது வீரராக ரிம் சவுத் தீ ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர். (15)

# இதுதான் இறுதி உலகக் கிண்ணம்




கொழும்பு,ஏப்.6

தனது உலகக்கிண்ணக் கிரிக்கெட் வாழ்க்கை முடிந்துவிட்டது எனவும் அடுத்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியில் தான் விளையாடப் போவதில்லை எனவும் இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான இறுதி ஆட்டத்தின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை வீரர்கள் தாயகம் திரும்பினர். அதன் பின்னர் தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் மலிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எனது அணிக்கு என்னால் முடிந்தளவு காலம் சேவையாற்ற முடியுமென நம்புகிறேன். ஆனால் 2015 ஆம் ஆண்டு அடுத்த உலகக் கிண்ணப் போட்டியில் என்னால் விளையாட முடியும் என நான் எண்ணவில்லை. கடந்த சில வாரங்களுக்காகக் காயத்திற்குள்ளாகியிருந்தேன். சிறிதளவே ஓய்வு கிடைத்தது என அவர் கூறினார்.

தனக்கு ஏற்பட்ட காயம் குறித்த விவரங்களை அவர் தெரிவிக்கவில்லை. 2008 ஆண்டிலும் 2009 ஆம் ஆண்டின் முற்பகுதியில் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் போட்டிகளில் பங்குபற்ற முடியாமலிருந்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்த உலகக்கிண்ணப் போட்டியில் சிறப்பாக விளையாடுமாறு இளம் வீரர்களை நான் கோருகிறேன் என அவர் கூறினார்.

இறுதி ஆட்டத்தில் சேவாக், சச்சின் டெண்டுல்கார் ஆகியோரின் விக்கெட்டுக்களை மலிங்க மிக விரைவாக வீழ்த்தினார். எனினும் இலங்கை அணியை 6 விக்கெட்டுகளால் இந்தியா வென்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சுற்றுப்போட்டியில் அவர் மொத்தமாக 13 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

எனது அணி எதிர்பார்த்ததை நான் நிறைவேற்றியுள்ளேன். இறுதி ஆட்டத்தில் பந்து ஈரமாக இருந்ததால் முறையாக 'யோர்க்கர்' வீச முடியவில்லை. என்னால் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்த முடியாமை குறித்து கவலையடைகிறேன் எனவும் மலிங்க கூறினார். (15)

# சிறு வயதுக் கனவு நனவாகிவிட்டது



சென்னை, ஏப்.6

உலகக் கிண்ணத்தை வென்றதன் மூலம் தனது சிறுவயதுக் கனவு நனவாகிவிட்டது என்று இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சாளர் அஸ்வின் கூறினார்.

மும்பையில் நடந்த உலகக் கிண்ண இறுதி ஆட்டத்தில் இலங்கையை வீழ்த்தி இந்திய அணி சம்பியன் பட்டம் வென்றது. உலகக் கிண்ண இந்திய அணியில் தமிழகத்தைச் சேர்ந்த சுழல் பந்து வீச்சாளர் அஸ்வின் இடம் பெற்றிருந்தார். அவர் மும்பையில் இருந்து நேற்று முன்தினம் காலை, விமானத்தில் சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவருக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர்.

அஸ்வின் அளித்த பேட்டியில்:

28 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா உலகக் கிண்ணம் வென்றது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஒவ்வொருவருக்கும் கனவு இருக்கும். அது போல், உலகக் கிண்ணத்தை இந்தியா கைப்பற்ற வேண்டும் என்ற கனவு சிறுவயதிலேயே எனக்கு இருந்தது. தற்போது அந்த கனவு நனவாகிவிட்டது. அதுவும் கிண்ணம் வென்ற அணியில் நான் இடம் பெற்றிருந்தது இரண்டு மடங்கு சந்தோசத்தை அளிக்கின்றது.

கிண்ணம் வெல்வதற்கு அணியின் கூட்டு முயற்சியே காரணம். அனுபவ வீரர் சச்சின் திறமையாலும் அணித்தலைவர் டோனியின் சிறப்பான செயற்பாட்டாலும் ஒட்டு மொத்த வீரர்களின் ஒற்றுமையாலும் உலகக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளோம். எங்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்திய ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அஸ்வின் கூறினார்.(15)

# அடிக்கிறதுஅதிர்ஷ்டம் டோனிக்கு



டெல்லி,ஏப்.6

உலகக்கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு பரிசு மழை கொட்டி வருகிறது. கிரிக்கெட் வாரியம் தனியாகப் பரிசுகளை அறிவித்துள்ள நிலையில் ஒவ்வொரு மாநில அரசுகளும், அமைப்புகளும் போட்டி போட்டுக் கொண்டு பரிசுகளை அறிவித்து வருகின்றன.

1983 ஆம் ஆண்டு கபில்தேவ் தலைமையிலான அணி உலகக் கிண்ணத்தை வென்ற போதும் வீரர்களுக்கு ஏராளமான பரிசுகள் கிடைத்தன. அப்போது ஒவ்வொரு வீரர்களுக்கும் ரூ.14 லட்சம் வரை மட்டுமே பரிசு கிடைத்தது.

ஆனால் இப்போது ஒவ்வொரு வீரர்களுக்கும் கிடைத்துள்ள பரிசுகள் சுமார் ரூ.4 கோடியில் இருந்து ரூ.8 கோடி வரை வருகிறது. அதாவது கபில்தேவ் அணிக்கு கிடைத்த பரிசுகளை விட இப்போது இந்திய அணிக்கு 60 மடங்கு அதிக அளவில் பரிசு கிடைத்து இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. (15)


## வான் விற்பனைக்கு

52-XXXX தொடரிலக்கமுடைய
LITE AC வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0771171872

## காணி விற்பனைக்கு

தென்மராட்சி, கொடிகாமம், கச்சாய் றோட், கச்சாய் அரசினர் பாடசாலைக்கு அருகில் எதிர்கால முதலீட்டுத் திட்டத்துக்கு ஏற்றவகையில் பெரிய நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள:-
0750476078, 0772021691, 0247911178.




# பயணி இறங்கும்போது புறப்பட்ட பஸ்

தென்மராட்சி, ஏப்.6

பயணிகள் இறங்கிக் கொண்டிருக்கையில் பஸ் புறப்பட்டதால் பஸ்ஸிலிருந்து தவறி வீழ்ந்த குடும்பப் பெண்ணுக்கு இடுப்பு எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது.

இந்தச்சம்பவம் மீசாலையில் இடம் பெற்றது.

மீசாலை மேற்கைச் சேர்ந்த சதாசிவம் மனோன்மணி (வயது 41) என்பவர் திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-207)

## விற்பனையாளர் தேவை

இலங்கை லொத்தர் சபையால் வெளியிடப்படும் லொத்தர் ரிக்கெட்டுக்களைப் பருத்தித்துறை, பருத்தித்துறையை அண்டிய கிராமப் பகுதிகளில் விற்பனை செய்ய அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை.

தொடர்பு:-
**து.கோணேஸ்வரன்,**
பத்திரகாளி கோயிலடி, பருத்தித்துறை.
T.P: 0779698994

# குருபூசை தினம்

யாழ்ப்பாணம், ஏப்.6

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன ஸ்தாபகர் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் 30ஆவது ஆண்டு நினைவு குருபூசைத் தினம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

குருமூர்த்தி ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று மதியம் 12 மணியளவில் மகேஸ்வர பூசையும் நடைபெறும். (எ)

# கார்த்திகை விரத தினம்

யாழ்ப்பாணம், ஏப்.6

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் கார்த்திகை விரததினம் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகளும், உற்சவங்களும் இடம் பெறும். (த-236)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### கந்தையா சின்னத்துரை

மண்ணில் 16.05.1934 — விண்ணில் 07.03.2011



எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.04. 2011) புதன்கிழமை மு.பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் கலந்துகொண்டு அவரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மு.கு: இதனைத் தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

மாசிவன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி. (41,21,23) **குடும்பத்தினர்.**

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 801
சீட்டிழுப்பு திகதி 04.04.2011

எழுத்து: K — வெற்றி இலக்கங்கள்: 04 26 33 69

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,243,175.20 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 16 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 353 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 697 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16784 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9553 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 240202 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37777 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 10,343,100.00

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 12,806,236.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/ 2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk






# கிளிநொச்சியில் சுகாதாரச் சீர்கேடான உணவகங்களுக்கு நீதிமன்றத்தால் தண்டம் விதிப்பும் எச்சரிக்கையும்

கிளிநொச்சி, ஏப். 6

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள உணவகங்கள் திடீர் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு சுகாதாரச் சீர்கேடான முறையில் இயங்கிய பன்னிரண்டு உணவகங்களின் உரிமையாளர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் இயங்கி வரும் உணவகங்கள், வணிக நிலையங்கள் என்பன கடந்த 15 ஆம் திகதி முதல் மாவட்ட சுகாதார சேவையினரால் திடீர் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தத் திடீர் ஆய்வுகளின் போது சரியான முறையில் இயங்காத உணவகங்கள், காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை செய்த உணவகங்கள், கழிவகற்றலை ஒழுங்காக மேற்கொள்ளாத உணவகங்கள் என நகரில் இயங்கிவரும் பன்னிரண்டு உணவகங்களின் உரிமையாளர்கள் மீது அவர்களது குற்றங்களுக்கு அமைவாகக் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு குற்றங்களுக்கு அமைவாகத் தண்டப் பணம் அறவிடப்பட்டதுடன் அவர்கள் எச்சரிக்கப்பட்டும் விடுவிக்கப்பட்டுள்ளனர். (க-6)

# ஆஸ்பத்திரியின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு அடிக்கல்



வவுனியா, ஏப். 6

வவுனியா பொது வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு வவுனியா, மன்னார் வீதியிலுள்ள சாளம்பன்குளத்தில் அமைக்கப்படவுள்ளது.

தெஹிவளை மெற்றோ லயன்ஸ் கழக மாவட்ட 306 ஏ1 கிளை அனுசரணையுடன் வெளிநாட்டிலிருந்து கிடைத்துள்ள சுமார் 140 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சிகிச்சை நிலையம் அமைக்கப்படும் என்று இந்தத் திட்டத்தின் தலைவி திருமதி மாலினி ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்.

லயன்ஸ் ஆளுநர் சுனில் தர்மரட்ன மற்றும் லயன்ஸ் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட ஆரம்ப வைபவம் சாளம்பைக்குளத்தில் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிவான் சுரேஸ்சந்திரன், முன்னாள் லயன்ஸ் ஆளுநர் அன்வர் டோல், தெஹிவளை மெற்றோ லயன்ஸ் தலைவர் எம். ரி. பாறுக், வவுனியா லயன்ஸ் கழக இணைப்பாளர் எஸ்.சிவபாலன், வவுனியா விசேட பொலிஸ் அதிரடிப்படை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஜெயவீர உள்ளிட்ட பலர் இந்த ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்துக்கு மத்திய நிலையமாக வவுனியா விளங்குவதனால் சாளம்பைக்குளத்தில் ஐந்து ஏக்கரில் இந்தச் சிகிச்சை நிலையம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான சகல உபகரணங்களையும் லயன்ஸ் கழகம் வழங்கவுள்ளது. (ம)

# அதிபர் பதவிக்கான நேர்முகத் தேர்வு

கிளிநொச்சி, ஏப். 6

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கான அதிபர் நியமனம் தொடர்பான நேர்முகத் தேர்வு இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநரின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர் சேவையின் தரம் 2-1, 2-2 ஆகியவற்றைச் சேர்ந்த பட்டதாரிகள் கலந்துகொள்ள முடியும்.

இவர்கள் தமது சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பம், நேர்முகத் தேர்வுக்கான ஆவணங்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். இதற்கான கடிதம் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது திருமதி கெங்காதேவி ஜெயராஜ் பதில் அதிபராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-405)

# மலேரியா தடுப்பு தீவிரம்

கிளிநொச்சி, ஏப். 6

மலேரியா நோயினைத் தடுக்கும் வகையில் வீட்டுத் தரிசிப்புக்கள் கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன.

மலேரியா நோயினைத் தடுக்கும் வகையிலும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையிலும் மலேரியா நோய்த் தடுப்பு இயக்கத்தினால் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் மலேரியா பரிசோதனை அட்டையொன்றும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

மீளக்குடியமர்ந்தோர் போதிய வசதி வாய்ப்புக்கள் இன்றி இருப்பதுடன் அவர்கள் வாழும் பகுதிகளில் இதுவரை மலே ரியாத் தடை மருந்து (மலத்தீன்) தெளிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-6)

# கல்விச் சுற்றுலா

கிளிநொச்சி, ஏப். 6

கிளிநொச்சி, கனகபுரம் றோயல் முன்பள்ளிச் சிறார்கள் கடந்த வெள்ளிக்கிழமை கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டு பல்வேறு இடங்களுக்கும் சென்றிருந்தனர்.

கடந்த 25 ஆம் திகதி பல்வேறு இடங்களுக்கும் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற் கொண்ட அடுத்த ஆண்டு தரம் -01 இல் கல்வி கற்கவுள்ள சிறார்கள் இந்தக் கல்விச் சுற்றுலாவின் போது யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள உதயதன் அலுவலகத்துக்கும் சென்று அங்குள்ள பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டுள்ளனர். (க-6)

# கருநாட்டுக் கேணியில் மீள்குடியமர்ந்தவர்களுக்கு தற்காலிக கொட்டில்கள் அமைத்து வழங்கப்படும்

## அரச அதிபர் தெரிவித்தார்

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவு கருநாட்டுக் கேணியடியில் மீள்குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் தங்குவதற்கு வசதியாக தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வருவதாக மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கருநாட்டுக்கேணி கிராமத்தில் உள்ள மக்கள் கடந்த 1984 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து பல்வேறு இடங்களில் வசித்து வந்தனர்.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் பின்னர் மீண்டும் இடம்பெயர்ந்து வவுனியா 'மெனிக்பாம்' முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

கருநாட்டுக் கேணியில் தற்போது கண்ணிவெடியகற்றும் பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்ட 50 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மக்கள் தங்குவதற்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. என்றும் - அவர்களுக்கு நிரந்தர வீடுகள் விரைவில் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

## என்றுமில்லாதவாறு...



மன்னாரில் கடந்த சில தினங்களாக மீன்களின் விலை அதிகரித்துக் காணப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மன்னார் மீனவர்கள் தெரிவிக்கையில், தற்போது மீன்கள் தென்பகுதிக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் இதனால் மன்னாரில் மீன் வகைகளின் விலை சற்று அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சி நகரில் கழிவகற்றல் சீராக இடம் பெறுவதில்லையாம்

கிளிநொச்சி, ஏப். 6

கிளிநொச்சி நகரில் கழிவகற்றல்கள் சரியான முறையில் இடம்பெறுவதில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி நகரான இரணைமடுச் சந்தியில் இருந்து கரடிப்போக்குச் சந்தி புனித பெண்கள் திரேசா கல்லூரி வரையான ஏ-9 வீதியின் 5 கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதியும் டிப்போ சந்தியில் இருந்து கனகபுரம் சேவியர் கடைச் சந்தி வரையான 2.5 கிலோமீற்றர் தூரம் வரையான பகுதியும் என 7.5 கிலோமீற்றர் தூரம் வரையான வீதியின் இருமருங்கிலும் நாடாத் தொடராகக் கிளிநொச்சி நகரின் வணிக நிலையங்கள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் நகரின் கழிவுகள் சரியான முறையில் அகற்றப்படுவதில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது ஒரு கழிவகற்றல் வாகனமும் மூன்று தொழிலாளர்களும் இப்பகுதிகளில் கழிவகற்றல் சேவைகளில் ஈடுபட்டு வருகின்றனர். 7.5 கிலோ மீற்றர் தூரம் வரையான நகரினைவிட பொதுச் சந்தை, பொது இடங்கள் (பொலிஸ் நிலையம், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள்) என்பவற்றிலும் தினமும் கழிவகற்ற வேண்டியுள்ளது. தினமும் காலை 8 மணி முதல் பி.ப.4 மணி வரையும் தொழிலாளர்கள் கழிவகற்றலில் ஈடுபடவேண்டிய நிலை காணப்படுகின்றது. அத்துடன் சில இடங்களில் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை கழிவகற்றப்படுகின்றன. சிலஇடங்களில் வாரக் கணக்கில் கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன.

சரியான முறையில் திட்டமிடப்பட்டு தினமும் காலை 7 மணி முதல் பி.ப. 2 மணி வரையும் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடும் போது தான் மறுநாளும் தொழிலாளர்கள் கழிவகற்றல் தொழிலில் ஈடுபட முடியும் எனவும் இதனை விட மேலதிக வாகனங்களைக் கழிவகற்றலுக்கு இணைத்து கொள்வதுடன் மேலும் தொழிலாளர்களையும் நியமித்துச் சரியான முறையில் திட்டமிட்டுக் கழிவகற்றலில் ஈடுபடும்போதும் தினமும் கழிவுகளைத் தேங்கவிடாமல் அகற்ற முடியும் எனவும் பலராலும் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (க-6)



இச் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
PC House வழங்கும் விசேட வெகுமதி...
KARBONN K316
கையடக்கத் தொலைபேசி
மற்றும்
Anti Virus முற்றிலும்
இலவசம்
KARBONN K316
ANTI VIRUS
Dual Core 3Ghz
Intel 41 Chipset M/B
500GB H D D
ATX CASSING
DVD WRITER
GENIUS K/B &
MOUSE
15.6" LCD
MONITER
Rs.38,400/=
Dual Core 3Ghz
Intel 41 chipset M/B
2GB DDR 111 RAM
500GB H D D
512MB NVIDIA
GEFORCE GT210
ATX CASSING
DVDWTITER
GENIUS KEYBOARD
& MOUSE
18.5: LCD MONITER
Rs.45,400/=
INTEL CORE I3 3.06GHZ
INTER H55 CHIPSET
2GB DDR 111 RAM
500GB H D D
ATX CASSING
DVD WRITER
GENIUS KEYBOARD
& MOUSE
18.5"LCD MONITER
Rs.49,900/=
INTEL CORE I3 3.06GHZ
INTEL H55 CHIPSET
4GB DDR III
1TB H D D
1GB NVIDIA GEFORCE
ATX CASSING
DVD WRITER
GENIUS KEYBOARD
& MOUSE
18.5" LCD MONITER
Rs.62,400/=
INTEL CORE I5 3.2GHZ
INTEL H55 C
2GB DDR III
500GB H D D
O/B
ATX CASSING
DVD WRITER
GENIUS KEYBOARD
& MOUSE
18.5" LCD MONITER
Rs.60,400/=
acer
ACCER ASPIRE
5742G-374G32
(2.4GHz CORE i3 370M/
4GB/ 320GB/
DVD Writer, Bluetooth
WEBCAM/ HD5470
15.6 LED
LINUX
Rs.69,000/=
acer
ACCER ASPIRE
5742ZG-P613G32
(2.0GHz P6100/
3 GB/320GB/
DVD Writer/
WEBCAM/ Bluetooth
15.6 LED/HD5470
WINDOWS 7 HOME
Rs.64,900/=
acer
ACCER ASPIRE
5742G-5464G 64
(2.53GHz CORE i5
460M/4GB
DVD Writer /640GB/
Bluetooth
Webcam/ GT420M
15.6LED
Windows 7 Home Premium
Rs.90,000/-
PAVILION DV6t-3200
Intel Core i3 2.4 GHz
4GB DDR-3 Ram
500GB HDD
15.6" Widescreen HD LED
Graphics Intel GMA-45
DVD Writer LS
Wi-Fi / Card reader
HP webcam / HDMI
Windows 7 Home Premium
Rs.92,000/=
hp
PAVILION DV5-2100
Intel Core i3 2.4 GHz
4GB DDR-3 Ram
500GB HDD
14.4" Widescreen HD LED
Graphics Intel GMA-45
DVD Writer LS
Wi-Fi / Card reader
HP webcam / HDMI
Windows 7 Home Premium
Rs.87,500/=
hp
PAVILION DV6-3050us
AMD N930 2.0 GHz
4GB DDR-3 Ram
640GB HDD
15.6" Widescreen HD LED
Graphics Intel GMA-45
DVD Writer LS
Wi-Fi / Bluetooth
HP webcam / HDMI
Card reader / Fingerprint
Windows 7 Home Premium
Rs.107,500/=
hp
Hp 625
AMD Athlon 2.2 GHz
3GB DDR-3 Ram
320GB HDD
15.6" Widescreen HD
Graphics ATI Radon
DVD Writer LS
Wi-Fi / HDMI
HP webcam
Card reader
Windows 7 Home Premium
Rs. 62,500/=
hp
C655 - S5061
Intel Core i3 2.4GHz
4GB DDR-3 Ram
500GB HDD
15.6" Widescreen HD LCD
Intel Graphics GMA-45
DVD Writer
Wi-Fi / Bluetooth
Card reader / Numpad
e-SATA / webcam
Windows 7 Home Premium
Rs.87,500/=
TOSHIBA
A11-S3511
LAPTOP TOSHIBA SATTELLITE
(2.27GHz CORE i3
M350/2GB/
DVD Writer
Webcam
15.6 LCD/F.T
Windows 7 Pro
Rs.95,000/=
TOSHIBA
PCH
Benchmark ICT
PC House PLC
இல. 1, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
கையடக்க தொலைபேசி - 0777-555855
தொலைபேசி- 021 4920572 :பக்ஸ்- 021 4920338
மேற் குறிப்பிட்ட ஏதாவது ஓர் கணனியினை கொள்வனவு செய்து
KARBONN K316 கையடக்கத் தொலைபேசி மற்றும்
Anti Virus Guard இனை முற்றிலும் இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
ஏனைய கிளைகள்
கிளிநொச்சி : 0772-068 989
மன்னார் : 0773-747 641/ 0234-920 614
வவுனியா : 0773-187 530/ 0244-589 572
நெல்லியடி : 0772-069 042/ 0214-925 156
மட்டக்களப்பு : 0777-589 025/ 0654-926 811

# சுன்னாகம் நகரில் வாகனங்களை நிறுத்துவதற்கு அனுமதி மறுப்பு

வலி.வடக்கு, ஏப். 6

சுன்னாகம் நகரப் பகுதியில் வாகனங்களை நிறுத்தி பொருள்களை ஏற்றவோ, இறக்கவோ அனுமதிப்பதில்லை என வலி. தெற்கு உடுவில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரத்துக்கு அடுத்ததாக சுன்னாகம் நகரம் சமூக பொருளாதார ரீதியில் வளர்ச்சி அடைந்து வருகின்றமையால் சுன்னாகம் நகரப்பகுதி ஊடான போக்குவரத்தும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் பகல் நேரங்களில் சுன்னாகம் நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களின் முன்னால் வாகனங்களை நிறுத்தி பொருள்களை ஏற்றி, இறக்குவதன் மூலம் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு உள்ளாவதுடன், விபத்துகளும் ஏற்படக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வர்த்தக நிலையங்களில் பொருள்களை ஏற்றி, இறக்கும் வாகனங்கள் காலை, மாலைகளில் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட வலி. தெற்கு பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்ட நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் வாகனங்கள் மீது சுன்னாகப் பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட் டுள்ளது எனவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (எ-86)

# வீதியில் அறிவிப்புப் பலகைகள் பொருத்துமாறு மக்கள் கோரிக்கை

நாவற்குழி, ஏப்.6

யாழ். பருத்தித்துறை வீதியில் அகலமாக்கப்பட்ட பிரதேசங்களில் விபத்துக்களைக் குறைக்கக் கூடிய அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதிகளில் அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்படாததால் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களில் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன.

வீதி அகலிப்பால் விபத்துக்கள் முன்பிருந்ததை விட கூடுதலாக நடைபெறுவதால் வேகக் கட்டுப்பாடு அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட்டால் விபத்துக்களைக் குறைக்கமுடியும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது வீதியின் வளைவுகள், சந்திகள், பாலங்கள், பாதசாரிகள் கடவை போன்ற இடங்களில் அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட்டால் விபத்துக்களை மேலும் குறைக்க முடியும் என மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

சகல சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஏ-121)

# நெடுந்தீவில் ஆர்ப்பாட்டம் நடத்த தயாராகி வருகின்றனர் மக்கள்

நெடுந்தீவு, ஏப்.6

வீதி அபிவிருத்தி அதிகார சபை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்ய நெடுந்தீவு மக்கள் தயாராகி வருகின்றனர்.

அது தொடர்பான முடிவு இன்னும் இரண்டொரு தினங்களில் வெளியாகும் எனவும் நெடுந்தீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

குமுதினி படகு புனரமைக்கப்பட்டு மீண்டும் நெடுந்தீவுக்கான தனது சேவையைத் தொடர வந்த போதும் உரிய முறையில் திருத்த வேலைகள் இடம்பெறாத நிலையில் மீண்டும் குறிகாட்டுவான் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன் புதிய படகான வடதாரகை II உம் அதனுடன் நங்கூரமிடப்பட்டுள்ளது.

எனினும் இந்த வாரம் குமுதினிப் படகு சேவைக்கு வரும் எனவும் நெடுந்தீவுப் படகுச் சேவை குறித்த கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் நெடுந்தீவில் நடைபெறும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்ததை அடுத்து இதில் கலந்துகொள்ளவென பெருந்தொகையான மக்கள் நெடுந்தீவுத் துறைமுகத்தில் குறிப்பிட்ட அதிகாரிகளின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

எனினும் அறிவித்தபடி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எந்த ஓர் அதிகாரியும் நெடுந்தீவுக்கு வருகைதராதமை மக்களை ஏமாற்றிவிட்டதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து மேற்படி அலுவலகத்தை நெடுந்தீவு மக்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்யத் தயாராகி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஏ-7)

## மீண்டும் சொந்த மண்ணில்...



வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ள கீரிமலை முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த குளிர்த்தி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. 1990 ஆம் ஆண்டு இந்தப் பிரதேசத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் 20 வருடங்களின் பின் நடைபெற்ற இந்தக் குளிர்த்தியில் கீரிமலைப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் பல்வேறு இடங்களிலும் இருந்து வந்து கலந்துகொண்டனர். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் இங்கு சென்றிருந்தார். (38)

## அரியாலை கிழக்கில் அலைந்து திரியும்

# கட்டாக்காலிக் கால்நடைகளை உரியவர்களிடம் கையளிக்க ஏற்பாடு

கொழும்புத்துறை, ஏப்.6

அரியாலை கிழக்குப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலையும் பெருந் தொகையான கால்நடைகளைப் பிடித்து மக்களிடம் ஒப்படைக்க நல்லூர் கமநல சேவைகள் நிலையம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் அரியாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தில் அண்மையில் நடைபெற்றபோது இதற்கெனக் குழு ஒன்று அமைக்கப்பட்டுக் கால்நடைகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பையும் பிரதான தொழிலாகக் கொண்ட அரியாலை கிழக்கு, நாவலடிப் பகுதி மக்கள் அப்பகுதியில் இருந்து 15 வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்தபோது கைவிட்டுச்சென்ற பல பட்டி மாடுகள் பெருக்கமடைந்து அந்தப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலைகின்றன.

கடந்த பெரும்போகச் செய்கையின் போது இந்தக் கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்களுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளில் உள்ள சிறு காடுகளுக்குள் இருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள் பிடிக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு பகிர்ந்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார். (த-135)

# உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவும் விளையாட்டுப்போட்டியும்

வலி.வடக்கு, ஏப்.6

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ள விளையாட்டு நிகழ்வுகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இன்று நடைபெறும் நிகழ்வுகளில் விருந்தினர்களாக சுன்னாகம் இலங்கை வங்கி முன்னாள் முகாமையாளர் எஸ்.வி.அரசகுமார், இணுவில் இந்து விளையாட்டுக் கழகத் தலைவர் லயன் செ.இலகுநாதன், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.பி.வைத்தியதிலக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளைய தினம் யாழ்ப்பாணம் கல்விவலயப் பாடசலைகளுக்கு இடையே நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டியும் ஆண்கள் பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளன.

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகத்துக்கும் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான உதைபந்தாட்டப் போட்டியும் இடம்பெறவுள்ளது. (எ-86)

# சுகாதார முகாமைத்துவ உதவியாளர்கள் 48 பேருக்கு நாளை மறுதினம் நியமனம்

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைபவம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களுக்கான நியமனம் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வடமாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

நியமனம் பெறும் 48 புதிய சுகாதார முகாமைத்துவ உதவியாளர்கள் வகுப்பு III இற்குத் தெரிவானோர் பெயர் விவரம் வருமாறு:-

சிவரஞ்சினி கணேசமூர்த்தி- புலோலி தெற்கு, கீர்த்தனா தங்கராஜா-மீசாலை, மாலதி செல்வச்சந்திரன்-மாரீசன்கூடல், றஜீந்தினி இராசையா- சண்டிலிப்பாய், வராகி வடிவேல்- குரும்பசிட்டி, புலோலி, வினுஜா தாமோதரன்- இடைக்காடு, லாவண்யா சிவசுப்பிரமணியம்- அளவெட்டி தெற்கு.

சியாமளா பத்மநாதன்-திருநெல்வேலி மேற்கு, பிரியங்கா பரம்சோதி- குப்பிளான் தெற்கு, சந்திரிக்கா தணிகாசலம்-உசன், இமயவல்லி வேலாயுதம்- மிருசுவில் வடக்கு, பிரணாளினி செல்வநாயகம்- மீசாலை வடக்கு, பிரியந்தினி உலகநாதன்- தொல்புரம், அபிதா ஆதித்தன்- புலோலி மத்தி, மாணிக்கவாசகர் குகரூபன்- வண்ணார்பண்ணை, யாழ்., நயந்தினி பாலசிங்கம்-சுன்னாகம், கிரிசா தெய்வேந்திரன்- நல்லூர், நித்தியா கேதீஸ்வரன்- பருத்தித்துறை, ரேகா அருமைநாயகம் -வதிரி, சுவதிகா சுப்பிரமணியம் - வட்டுக்கோட்டை, பிரிந்தினி பரம்சிவம் -நவாலி வடக்கு, சிவாஜினி வெள்ளியம்பலம்- சங்கரத்தை, தனுசியா சுப்பிரமணியம்- சிறுப்பிட்டி கிழக்கு, கோபிகா நல்லதம்பி - சாவகச்சேரி, ராதிகா வசந்தரூபன்- இமையாணன் வடக்கு, மேரி டொமல்ரில்டா மரியதாசன் - பண்டத்தரிப்பு, இதயராணி தெய்வப்புலேந்திரா - நெல்லியடி, சுமதா பரமாணந்தம் -தொண்டமானாறு, சவீதா குருகுலசிங்கம் -கரணவாய் தெற்கு, தர்சிகா சுந்தரராசா- திருநெல்வேலி, சைந்தவி கேதீசன் - தாவடி தெற்கு, இந்துஜா மகாலிங்கம்-தாவடி தெற்கு, கீர்த்திகா ஸ்ரீதரன்- சுன்னாகம் மேற்கு, கல்யாணி நடராஜா-சுழிபுரம், சுலோஜனா கோபாலபிள்ளை- காரைநகர், கோபிகா இராசநாயகம்- நீர்வேலி தெற்கு, அஜந்தி அன்ரன் வில்வராசசிங்கம்-யாழ்ப்பாணம், சுஜந்தினி செல்வகுமாரன்- வவுனியா,கணேசபாலன் இந்துஜன்- நெளுக்குளம், அனுஜா குணநாயகம் -திருகோணமலை, கஸ்தூரி விஜயசுந்தரம்-வவுனியா, கருணாகரன் நிஷாகரன்- தோணிக்கல்,வவுனியா, பிரியா அச்சுதநாத்-வவுனியா, தமிழரசி அஜந்தன் - வவுனியா, வன்னி நாயக்க முதியன்சலகேசாலிகா-வவுனியா, ஏ.எச்.எம்.சனிகா லக்மலி பண்டார -வவுனியா, தஸ்லீம் ஹிஷான்- புத்தளம், றிவ்தா முகமது அபூபக்கர் - பாலாவி, புத்தளம்.(ஒ-எ)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். கூட்டுத் தொழிலில் சுமுகமான நிலைமை காணப்படும். தேக ஆரோக்கியத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பின்னர் சரியாகி விடும். பிள்ளைகளின் செயற்பாடுகளை நினைத்து பெருமைப்படுவீர்கள். நாளை சந்திக்க நினைத்த ஒருவரை இன்றே பார்க்கும் வாய்ப்பு கிடைக்கலாம்.

**இடபம்:**
பரிகாசப் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டிய நாள். கடனாகக் கொடுத்த பணம் திடீரென திரும்பி வரலாம். உறவினர்கள் சிலர் மூலம் உதவி பெறலாம். தொழில் ரீதியாக மற்றவர்கள் செய்த தவறால் நீங்கள் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். பயணங்களால் உடல் அசதி, சோர்வு ஆள்கொள்ளும். தர்ம, புண்ணிய காரியங்களைச் செய்வீர்கள்.

**மிதுனம்:**
அதிகரிக்கும் செலவுகளை புதிய பண வரவுகளால் சரிக்கட்டுவீர்கள். பெண்கள் தொடர்பான வழியில் உதவிகள் கிடைக்கும். பிரதிபலனை எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான லாபம் பெறலாம். நண்பர்களுக்கு நல்ல யோசனைகள் சொல்வீர்கள். உறவினர்கள் சிலர் உங்களுக்காகச் செலவு செய்யலாம். சுகமான அனுபவம் பெறலாம்.

**கடகம்:**
மனக்குறைகள் தீர்ந்து நிம்மதி பெறும் நாள். முக்கியமான வேலை ஒன்றை முடிக்க கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். உறவினர் ஒருவருக்காக மற்றொருவரிடம் பரிந்து பேசுவீர்கள். பழகிய சிலர் மூலம் பணச் செலவுகளைச் சந்திக்கலாம். குறுக்கு வழி முயற்சிகளைத் தவிர்த்து எதிலும் நேர்மையாக செயற்பட முற்படுவீர்கள். வெற்றிகரமான நாள்.

**சிங்கம்:**
நிம்மதி, சந்தோஷம் குடிகொள்ளும் நாள். கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம். நிறுத்தி வைத்த பயணம் ஒன்றை இன்று மேற்கொள்வீர்கள். சாமர்த்தியமான பேச்சுக்களால் காரியம் சாதிப்பீர்கள். ஒரு விடயம் குறித்து பல நாள்களாக கட்டிய மனக்கோட்டை தகர்ந்து போகலாம். புதியவர் நட்பு கிடைக்கும்.

**கன்னி:**
கடன் பிரச்சினைகளால் கவலை ஏற்படலாம். புதிய முயற்சிகளைத் தள்ளி வைக்க வேண்டிய நாள். உங்களைப் பார்த்து மற்றவர்கள் பொறாமை கொள்ளலாம். குடும்ப உறுப்பினர்கள் வழியில் திடீர் செலவுகளை சந்திக்கலாம். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும்.

**துலாம்:**
எதிலும் சாமர்த்தியமாகவும், தந்திரமாகவும் செயற்படும் நாள். நண்பர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகத்தைப் பெறலாம். எடுத்த காரியங்கள் தடையின்றி முடிவுக்கு வரும். கணவன், மனைவி இடையே பாசம் கூடும். பணவரவுகளைப் பெற வாய்ப்புகள் உண்டு.

**விருச்சிகம்:**
போட்டி, எதிர்ப்புகளை வெற்றிகரமாக முறியடிப்பீர்கள். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். மனதிற்கு சந்தோஷம், உற்சாகம் தரும் செய்திகளைக் கேட்கலாம். கைவிட்டுப் போனதாக நினைத்த வாய்ப்பு ஒன்று மீண்டும் தேடி வரலாம்.

**தனுசு:**
வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிப்பீர்கள். உறவினர்கள் வழியில் உதவிகளை எதிர்பார்க்க வேண்டாம். பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளை சந்திக்கலாம். புதிய விடயங்களில் தலையிட வேண்டாம். பொலிஸ் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சிலருடன் சேர்ந்து வெளியூர் பயணங்கள் செல்லும் சூழல் உருவாகலாம்.

**மகரம்:**
திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களுக்குப் பின் வெற்றி பெறலாம். மன நிம்மதி பெற கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வீர்கள். வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க பல இடங்களுக்கு அலைந்து திரியலாம். சக ஊழியர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம்.

**கும்பம்:**
பெண்கள் விடயத்தில் அன்பாக நடந்து கொள்வீர்கள். நண்பர்களுக்காக சில உதவிகளைச் செய்ய நேரிடலாம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. கடந்த காலத்தில் நீங்கள் செய்த உதவிக்கு இன்று ஒருவர் பதில் உதவி செய்யலாம். மற்றவர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுப்பீர்கள்.

**மீனம்:**
விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். அயலார் அனுசரணையாக நடந்து கொள்வர். மாமன், மைத்துனர்கள் வகையில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.



தனக்கென்று ஓர் பாரம்பரியம், கலை, பண்பாடு மற்றும் கலாசாரங்களைக் கொண்டதாகக் கல்வி ஆற்றலிலும் உலக வியக்கத்தக்க வகையில் மிளிர்ந்தது எம் தமிழினம்.

இன்று சகல தாற்பாரியங்களையும் இழந்த நிலையில் களையிழந்து சோபையிழந்து எதிர்காலம் குறித்த கேள்விகளுடன் அல்லாடிக் கொண்டிருக்கின்றது.

இலங்கை தன்னை ஓர் ஜனநாயக நாடு எனப் பெயரளவில் பிதற்றிக் கொண்டுள்ளது.

எனினும் இங்கு வாழும் மக்கள் எவரும் அதிலும் முக்கியமாகத் தமிழர்கள் முழுமையான சுதந்திரத்தையோ அவரவர் உரிமைகளையோ பூரணமாக அனுபவிக்கிறார்களா? என்பது கேள்விக் குறியாக உள்ளது. அதேசமயம் கேலிக்குரியதாகவும் உள்ளது.

அந்தநாள் தொடக்கம் பெரும்பான்மை அரசுகளினால் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன. இதன் காரணமாக இளம் சமுதாயத்தினர் வீதிகளில் இறங்கிப் போராடத் தொடங்கினர்.

அந்தப் போராட்டங்கள் வன்முறைகளாக விரிவடைந்து மூன்று தசாப்தங்களின் இறுதியில் ஓர் உள்நாட்டு யுத்தமாகப் பரிணமித்தது.

நாட்டில் வடக்கு, கிழக்கில் பெரும் உயிரழிவுகளையும் கணக்கற்ற சொத்தழிவுகளையும் ஏற்படுத்தியது போர்.

எஞ்சியிருக்கும் தமிழ்ச் சமூகத்தை ஏதிலிகளாகவும், ஊனமுற்றோராகவும், மனோநிலை பாதிப்படைந்தவர்களாகவும் மாற்றியமைத்தது.

அத்துடன் எதிர்காலம் பற்றிய சிந்தனைக்கு எள்ளளவேனும் இடமற்ற நிலைக்குத் தமிழினத்தை அதல பாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது.

இலங்கை அரசு 2009இல் மனிதநேய மீட்பு நடவடிக்கை எனும் பெயரில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் இறுதிக் கட்டங்களில் ஆகக் குறைந்தது 80 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பன்னாட்டு மனிதநேய அமைப்புக்களின் கணிப்பீடுகள் தெரிவிக்கின்ற படி இந்தப் போர் 27 ஆயிரம் பெண்களை விதவைகளாக்கியுள்ளது.

''மூன்று தசாப்த காலமாகப் புரையோடியிருந்த பயங்கரவாதம் எனும் புற்றுநோயில் இருந்து நாட்டையும், மக்களையும் மீட்டெடுத்து விட்டேன். பயங்கரவாதம் பூண்டோடு அழிக்கப்பட்டு விட்டது. எல்லோரும் இந்நாட்டு மக்களே. மத, இன, பேதமின்றி அனைவரும் இலங்கையின் எப்பகுதிக்கும் பயமின்றி சுதந்திரமாகச் சென்று வரலாம்'' என்று ஜனாதிபதி உலகறியப் பகிரங்கமாகப் பறை சாற்றினார்.

''அதுமட்டுமன்றி நடந்தவை யாவும் துரதிர்ஷ்ட வசமானதே. எனினும் வடக்கு, கிழக்கு மக்களின் இழந்த உயிர்களைத் தவிர ஏனைய சகலத்தையும் அதாவது வாழ்வாதாரம், சொத்துக்கள் என்பவற்றை மீளப் பெற்றுவளமான வாழ்க்கை வாழ வழி சமைப்பது ''மஹிந்த சிந்தனை'' யின் தார்மீகக் கடமையும், பொறுப்புமாகும். என்று அகில உலகமும் வியக்கும் வண்ணம் ஜனாதிபதி குரல் எழுப்பியுள்ளார்.

> **நாட்டில் வடக்கு, கிழக்கில் பெரும் உயிரழிவுகளையும் கணக்கற்ற சொத்தழிவுகளையும் ஏற்படுத்தியது போர். எஞ்சியிருக்கும் தமிழ் சமூகத்தை ஏதிலிகளாகவும், ஊனமுற்றோராகவும், மனோநிலை பாதிப்படைந்தவர்களாகவும் மாற்றியமைத்தது. அத்துடன் எதிர்காலம் பற்றிய சிந்தனைக்கு எள்ளளவேனும் இடமற்ற நிலைக்குத் தமிழினத்தை அதலபாதாளத்தில் தள்ளிவிட்டுள்ளது.**

போர் முடிவடைந்து இரண்டு வருடங்களாகப் போகின்றன. ஆறே ஆறு மாதத்துக்குள் மீளக் குடியமர்வு என்று கூறப்பட்டதும் முடிந்தபாடில்லை.

அதுமட்டுமா, மீள் குடியமர்வுக்காகச் சில மாதங்களுக்கு முன்னதாகவே கொண்டு செல்லப்பட்ட பல குடும்பங்கள் இன்னும் தற்காலிக இடங்களிலேயே தங்கி உள்ளன. அவர்களது சொந்த நிலங்கள் இராணுவத் தேவைக்கென சுவீகரித்துக் கொண்டதன் நிமித்தம் இன்னும் நடுத்

**ஜெகன்**

தெரு நாராயணிகளாக அல்லுறுகின்றன.

தடுப்பு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் தமது கணவன் தம்முடன் வந்திணைவது எப்போது என்று பிள்ளைகளுடன் ஏங்கித் தவிக்கும் மனைவி, விரைவில் தமது பிள்ளைகள் விடுதலையடைந்து தம்மிடம் வந்து சேர்ந்து தங்களைப் பராமரிப்பார்கள் எனும் நப்பாசையுடன், வறுமையிலும், நோயிலும் அவதியுற்றுக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் என்று பல்வகை சொல்லொணாத் துயரங்கள் மத்தியில் வாழ்வா? சாவா? என்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழினத்துக்கு விடிவுகாலம் எப்போது? விடை காண்பது புதிராகவே உள்ளது.

புலிகள் அழிக்கப்பட்டனர் என்று கூறப்பட்ட பின்னராவது அனைத்து வழிகளிலும் பாதிக் கப்பட்டு குற்றுயிர் நிலையில் தவிக்கும் ஈழத் தமிழர்கள் குறித்து

# எட்டாக் கனியாகுமா நாட்டின் அபிவிருத்தி...?

எவ்வித ஆக்கப்பூர்வமான நடவடிக்கையினையும் இந்தியா வும் மேற்கொள்ளவில்லை.

தன்னாதிக்கத்தை நிலை நிறுத்தும் கைங்காரிங் களிலேயே கண்ணும் கருத்துமாகவுள்ளது அது.

வடக்கில் தனது தூதரகக் கிளை திறப்பு, வங்கி அலுவலகம், வணிக முதலீடுகள் போன்றவற்றில் டிட்டுமே கவனம் செலுத்துகின்றது.

இது ஒருபுறமிருக்க ஐ.நா. தொடக்கம் பல மேற்கத்தைய நாடுகள் மற்றும் மனிதநேய அமைப் புகள் பலவும் ஈழத் தமிழர்களின் அவலங்கள் குறித்து அடிக்கடி குரல்கள் எழுப்புகின்றன.

எனினும் பின்னர் அந்த நாடுகளின் இராஜ தந்திரிகளின் இலங்கைக்கான இரண்டொரு பய ணங்களின் பின்பு அவையாவும் மௌனமாகி விடு கின்றன. அல்லது மௌனிக்க வைக்கப்படுகின் றனவா என்றும் ஒரு புறம் எண்ணத் தோன்றுகிறது.

இன்றைய காலத்தின் அவசியமும், அவசர முமான தேவைகள் நிறைவேற்றப்படல் வேண் டும்.

அதைவிடுத்து வெறும் மேடைப் பேச்சுகளும், போலி வாக்குறுதிகளும் இன்றைய தேவை அல்ல என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

யதார்த்தமான ஆக்கபூர்வ செயற்பாடுகளைக் கால தாமதமின்றி மேற்கொள்ளுதல் வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களை அவரவர் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தி, காணியற்றோர்க்குக் காணிகளை வழங்கியும், சேதமுற்ற வீடுகளைப் புரணமைக்க நிதி வசதியினையும் வழங்கியும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் அவர்களது ஜீவனோபாயத்திற்கான நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் அவசியம்.

அவரவர் இழப்புக்களுக்கேற்ப நஷ்டஈடுகளை உரிய காலத்தில் வழங்குவது வரவேற்கத்தக்கது. இதன்மூலம் மக்களது இன்னல்களை ஓரளவுக்கா வது தீர்க்கமுடியும்.

தீவிரவாதம் முறியடிக்கப்பட்டுவிட்டது, பயங் கரவாதம் முற்றாக இல்லாதொழிக்கப்பட்டுவிட்டது இலங்கை விரைவில் ஆசியாவிலேயே ஆச்சரியம் மிக்க நாடாக மலரப் போகின்றது என்று மார்தட்டி முழக்கமிட்டுக் கொண்டிருப்பது பலன்தராது.

வடக்கில் இராணுவத்தின் பிரசன்னத்தை அதி கரிப்பதன் மூலமாகவும் மக்களின் பிரச்சினைகள் திராது. இவ்வாறான அபிவிருத்திச் செயற்பாடுகள் புறக்கணிப்புச் செய்யப்படுமானால் எல்லோராலும் எதிர்பார்க்கப்படும் நல்லிணக்கம் என்பதும் நாட் டின் அபிவிருத்தி என்பதும் எட்டாத கனியாக அமையுமென்பதில் ஐயமில்லை.



## காலம் மாறும்



ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு கவலை - பயம் எல்லாம் அதிகமாகி விட்டது. மரண பயத்தால் இரவில் தூங்க முடியாது கஸ்ரப்பட்டான்.

போர்க்களங்களில் எத்தனையோ பேரை ஓட ஓட விரட்டியவன் இந்த அரசன். ஆனாலும் இப்போது அந்தத் துணிச்சல் எல்லாம் எங்கேயோ போய் விட்டது. என்ன செய்யலாம் என்று யோசித்தான். முடிவில் எல்லா அமைச் சர்களையும் கூப்பிட்டு ''எனக்கு ஒரு நல்ல ஆலோசனை சொல்லுங்கள்? என் றார். ''என்ன ஆலோசனை?'' என்று கேட்டார்கள் அமைச்சர்கள்.

அரசன் எனக்கு ஒரு நெருக்கடியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால் அந்த நேரத்தில் நீங்கள் யாருமே என் பக்கத்தில் ஆலோசனை சொல்வதற்கு இல்லையென்றால் அந்த சமயத்தில் எனக்கு உபயோகப்படுகின்ற மாதிரி ஒரு வாசகம் -பொன்மொழி சொல்லுங்கள். அதை நான் என்னுடைய மோதிரத்துக்கு அடியில் பதித்து வைத்துக்கொள்கிறேன் என்றார்.

அவர் போட்டிருந்த மோதிரமும் திறந்து மூடுவதற்கு ஏற்ற மாதிரி அமைந்திருந்தது. அமைச்சர்கள் யோசனை செய்தார்கள், என்ன வாசகம் சொல்லலாம் என்று. ஒருத்தருக்கும் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. குழப்பமாக இருந்தது. அந்த நேரத்தில் ஒரு பெரியவர் அங்கே வந்தார்.

அவர் நான் அதற்குப் பொருத்தமான ஒரு வாக்கியம் சொல் வேன். ஆனால் ஒரு நிபந்தனை. அதையாரும் ஆர்வம் காரணமாக அவசரப்பட்டுப் படித்துவிடக் கூடாது. அதை இரகசியமாக அந்த மோதிரத்துக்குள்ளே எழுதி வைத்து மூடிவிட வேண்டும். எப்போதாவது இக்கட்டில் மாட்டிக்கொள்ளும் போது, வேறு வழியே இல்லை என்கின்ற நிலைமையில் மட்டும்தான் அதைத் திறந்து பார்க்க வேண்டும் என்றார்.

சரியென்று எல்லோரும் ஒத்துக்கொண்டதை அடுத்து அவர் சொன்ன வாக்கியத்தை இரகசியமாக மோதிரத்துக்குகள் பதித்து மூடி விட்டார்கள். ராஜா அதை அணிந்துகொண்டார்.

கொஞ்சநாள் கழிந்ததும் அடுத்த நாட்டு மன்னன் படை யெடுத்து வந்தான். அவன் இவரிடம் ஏற்கனவே தோற்றுப் போன வன். ஏதோ ஒரு வெறியில் வந்து வெற்றி பெற்றுவிட்டான்.

இவர் நாட்டை இழந்தார். எல்லாவற்றையும் இழந்தார். ஓர் அடிபட்ட குதிரை ஒன்றிலே ஏறி தப்பிப் போய்விட்டார். எதிரிகள் இவ ரைப் பின்னால் துரத்திச் சென்றார்கள். இவர் ஒரு மலை உச்சிக்குப் போய்விட்டார்.

அதற்கு அப்பால் போக முடியாதளவு பயங்கர பள்ளமாக இருந்தது உல்லா சப் பயணிகள் வந்து கண்டுகளிக்கிற இடம் இது. ஆனால் இவருக்கு அது சாவுப் பயணத்தின் வாசல். திரும்பும் முடியாதள வுக்கு மிகவும் குறுகிய உச்சி.

வேறு வழியே இல்லை இந்த நேரம் சூரிய ஒளி மோதிரத்தில் பட்டு மின்னியது. உடனே இவருக்கு ஞாபகம் வந்தது. மோதிரத் தைத் திறந்து படித்தார். அதில் இருந்த அந்த வாசகம் ''இந்த நிலையும் மாறிவிடும்.'' அது அவருக்கு ஒரு தைரியத்தை ஏற் படுத்தியது. பின்னால் வந்தவர்களும் எங்கேயோ திசைமாறிப் போய்விட்டார்கள்.

அவர்கள் விரட்டிக்கொண்டு வரவில்லையென்றால் இவ் வளவு அழகான ஓர் இடம் இருப்பதே எனக்குத் தெரியாமல் போய் இருக்குமே என்று நினைத்தார். பின்னர் மலை உச்சியிலிருந்து ஒருவாறாக மீண்டும் ஓர் இடத்தில் தங்கி மறுபடியும் படை களைத் திரட்டினார். கொஞ்ச நாளில் படையெடுத்துக் கொண்டு போனாய யாரிடம் தோற்றாரோ அவரையே வெற்றிகொள்கிறார். இந்த வெற்றியை ஆடல் பாடல்களுடன் கோலாகலமாக நடத்துகின்றார். என்னை இனிமேல் யாராலும் ஜெயிக்க முடியாது என்று நினைத்தார். அகம்பாவம் லேசாகக் குடி புகுந்தது.

இப்போது மறுபடியும் சூரிய ஒளிபட்டு மோதிரம் மின்னியது அதைத் திறந்து மறுபடியும் படித்தார். ''இந்த நிலையும் மாறிவிடும்'' அவ்வளவுதான். அவர் மனம் அடங்க ஆரம்பித்தது. ஆணவம் போய்விட்டது.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

எந்தச் சூழ் நிலையிலும் நாம் கவலைப்பட வேண்டியதில்லை ஏனென்றால் இங்கே எதுவுமே நிரந்தமில்லை.

அந்த ராஜா மாதிரியே ஒருத்தன் ஒரு மோதிரம் போட்டிருந்தான் அதற்குள் அவன் எழுதிவைத்திருந்த வாசகம் ''எதுக்கும் கவலைப் படாதே.''

ஒரு நாள் பயங்கரமான கவலையுடன் உட்கார்ந்திருந்தான். பக் கத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள் இந்த மாதிரியான சந்தர்ப் பத்தில் தான் நீ உன் மோதிரத்தைத் திறந்து பார்க்கவேண்டும் என்று. கவலையோடு எரிச்சலும் அடைந்த அவன் ''அது எப்படி முடியும்? இப்போது திருட்டுப் போனதே என்னுடைய அந்த மோதிரம் தானே'' என்று கூறிவிட்டு தலையிலே கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்தார்.

கோ. சுவாமிநாதன்.

# யாழ்.விளையாட்டுத் துறைக்கான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு உரிய நடவடிக்கை

## வீரர்கள் கௌரவிப்பில் சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு வரவு- செலவுத் திட்டத்தின்போது நிதி பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளன.

எனவே, திட்ட அறிக்கையைத் தயாரித்து வழங்கினால் அதனை விளையாட்டுத் துறை அமைச்சரிடம் சமர்ப்பித்து விளையாட்டுத் துறைக்கான நிதியைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

-இவ்வாறு விளையாட்டு வீரர்கள் மத்தியில் உரை நிகழ்த்தும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்தார்.

அகில இலங்கை ரீதியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட பருத்தித் துறை உதைபந்தாட்ட லீக் வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமையாழ்.நாவலர் மண்டபத்தில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் இவ்வாறு தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்கு 'உதயன்' தொடர்ந்தும் பங்களித்து வருகின்றது. அகில இலங்கை ரீதியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பருத்தித்துறை உதைபந்தாட்ட வீரர்கள் யாழ்ப்பாண மக்களால் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். அதற்கான வசதிகள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும். வீரர்களுக்கு ஊக்கத்தை வழங்கும் வகையில் கௌரவிப்பு நிகழ்வுகள் நடத்தப்படுவது அவசியமானது.

எமது விளையாட்டுத்துறை பல கோணங்களில் திட்டமிட்ட முறையில் திசை திருப்பப்படுகிறது. அரசியல் விளையாட்டுத் துறையில் செல்வாக்குச் செலுத்துவதை அனுமதிக்கக்கூடாது.

யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் அனைத்து நிகழ்வுகளிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியும் கலந்துகொள்கின்றனர். ஈ.பி.டிபியினர் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்குத் தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி அமைச்சரையும் ஆளுநரையும் நிகழ்வுகளின்போது அழையுங்கள் என வற்புறுத்தி வருகின்றனர்.

அடாவடித்தனத்தின் ஊடாக மக்களைப் பயன்படுத்துகின்றனர். அதன் காரணமாக மக்கள் தமது பிரச்சினைகளை வெளியே கூறமுடியாது தவிக்கின்றனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதற்கு மக்களது ஒத்துழைப்புத் தேவை.

யாழ்.மாவட்டத்தில் 21 வங்கிகளின் கிளைகள் உள்ளன. அந்த வங்கிகளை அணுகி, விளையாட்டுத் துறைக்குப் பங்களிப்பு வழங்குமாறு கேளுங்கள். அவர்கள் உங்களுக்கு நிச்சயமாக உதவ வேண்டும்.

எமது விளையாட்டுத் துறையை வளர்த்து எடுக்க என்னாலான உதவிகளை வழங்குவேன். முப்பது வருடங்களுக்கு முந்திய நிலைக்கு விளையாட்டுத்துறை மீளவும் வரவேண்டும்- என்றார். (த-14)

# பொதுக் கூட்டம்

தென்மராட்சி. ஏப்,6

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினர்களாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன், கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் டாக்டர் வ.அமிர்தலிங்கம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இ.இரகுநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். (ம-207)

* * *

மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாலயப் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். வித்தியாலய பழைய மாணவர்களைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அதிபர் வே.சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார். (ம-207)

**தென்னந் தீராந்தி விற்பனைக்கு**

எம்மிடம் 3"X 2"அளவுகளில் 10.5 அடி நீளமானதும் 500 இற்கும் மேற்பட்ட தென்னந்தீராந்திகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே: 0773024293




யாழ்ப்பாணம், ஏப்.6

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். தினமும் காலைத் திருவிழா 6.30 மணிக்கும் மாலைத் திருவிழா 5 மணிக்கும் ஆரம்பமாகி இடம்பெறும். (ம)

* * *

தென்மராட்சி, ஏப்.6

சாவகச்சேரி கல்வயல் ஹரிகரபுத்திர ஐயனார் ஆலய மணவாளக் கோலமும் அலங்காரத் திருவிழாவும் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்காபிஷேகமும் தீர்த்தமும் நடைபெற்று மறுநாள் திருக்கல்யாணம் இடம்பெறும். (ம-207)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வருடப்பிறப்பை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

புதுவருடப் பிறப்பு தினமான 14ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு மூலவர் அபிஷேகமும், காலை 8.30 மணிக்கு ஸ்ரீ இரங்கநாதர் அபிஷேகமும், முற்பகல் 10.15 மணிக்கு காலை சந்திப் பூசையும், முற்பகல் 11.33 மணிக்கு வருடப்பிறப்பு விசேட பூசையும், முற்பகல் 11.45 மணிக்கு ஆதி வேங்கடேசர் உற்சவமும் நடைபெறும். (ற-313)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

வேலணை, மண்கும்பான் வெள்ளைப் புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

புதுவருட தினமான 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். (ற-7)

* * *

காரைநகர், ஏப்.6

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-250)

* * *

யாழ்ப்பாணம், ஏப். 6

வட்டுக்கோட்டை, அராலி மத்தி-உலோலை சிட்டி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சப்பரத் திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ற)

* * *

தென்மராட்சி,ஏப்.6

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

எதிர்வரும் 14 ஆம் திகதி புதுவருட தினத்தன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-207)

* * *

தென்மராட்சி, ஏப்.6

சாவகச்சேரி, சங்கத்தானை சித்தியடிப் பிள்ளையார் ஆலயப் பெருந் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் சித்திராப் பௌர்ணமி தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-207)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலின் வருடாந்தப் பெருந் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 16 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-313)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.6

மூளாய் வதிரன்புலோ சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ம)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

நடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No.1 புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் 100/= 07.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| சுட்டிபாம் சென்ரர், வட்டுக்கோட்டை | -0778996085 |
| சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | -0776904590 |
| நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | -0774656377 |
| முருந்தன், பருத்தித்துறை | -0771392593 |

கோழி திருப்பி கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல.021 222 6944

ஆவது
**13 ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்:
26.12.1942

மறைவு:
30.03.1998

அமரர்
**க. இரத்தினராசா**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர் , வலயம் 1)

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்

'மாணிக்கம்',
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (48,20)

அன்புடன் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




கொழும்பில் பணியாற்றிய அனுபவம் மிக்க சமையல் நிபுணர்களின் கை வண்ணத்தில் தயாரிக்கப்பட்ட உயர்தர உணவு வகைகளான பீசா *(pizza)*, புரியாணி *(Buriyani)*, பிறைட்றைஸ் *(Friedrice)*, நூடில்ஸ் *(Noodles)*, டெவில்ஸ் *(Devilleds)* , சூப் வகைகள் *(Soups)* போன்றவற்றை உங்கள் வீட்டு வாசலிலேயே பெற எங்களை அழையுங்கள்.

*(உங்கள் விசேட வைபவங்களுக்குத் தேவையான ஒடர்கள் செய்து தரப்படும்)*

இல.118, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 0456, நேரடி: 0779773032

# வடக்கு அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்ட நிதி அரச விரோத நடவடிக்கைகளுக்கு பயன்பாடு

## அமைச்சர் றிசாட் பதியுதீன் தகவல்

கொழும்பு, ஏப்.6

வடக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி அரச விரோத நடவடிக்கைகளுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது என்று வர்த்தகத்துறை அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் மன்னார் மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவானோர் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முசலியில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கில் இருக்கும் பெரும்பாலான அரச அதிகாரிகளும் அரசுக்கு விரோதமான முறையில் மக்களைத் திசை திருப்பவே முயற்சி செய்வதன் காரணமாக மக்களும் அரசை நாடிவரத் தயக்கம் காட்டுகின்றனர். வடக்கின் அபிவிருத்தி மற்றும் இன்னோரன்ன நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி, அமைச்சர்கள், அரசின் ஏனைய நிதியுதவிகள் ஆகியன இப்பிரதேசங்களில் அரசுக்கு எதிராகவே அதிகாரிகளால் பயன்படுத்தப்படுகின்றது.

அத்துடன் அரசை நாடிச் செல்லாதவாறு பொதுமக்களும் இங்குள்ள அரச அதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர். அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடையாமல் அவர்கள் குறுக்கே நின்று தடுக்கின்றனர். (சி)

**பயணம்.....**



வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேற்றுமுன்தினம் சென்ற ஐக்கிய தேசிய கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவைப் பார்வையிட்டனர். (204)

# புத்தாண்டை முன்னிட்டு விசேட போக்குவரத்து

கொழும்பு, ஏப்.6

தமிழ், சிங்கள புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் கொழும்பிலிருந்து சொந்த பிரதேசங்களுக்குச் செல்லும் பயணிகளின் நன்மை கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடவடிக்கைப் பணிப்பாளர் விபுலஹேவா வலிமுனி தெரிவித்துள்ளார்.

இதன்படி இன்று முதல் இந்த விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை, ரயில்வேத் திணைக்களம் மற்றும் மேல் மாகாண போக்குவரத்து அதிகாரசபை ஆகியன இணைந்து இந்த ஒன்றிணைந்த போக்குவரத்து சேவையை முன்னெடுக்கவுள்ளன.

போக்குவரத்தை மேற்கொள்ளும் பொதுமக்களிடம் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக கட்டணங்களை அறவிடும் பஸ்களை சுற்றிவளைக்க நடமாடும் பரிசோதகர்களையும் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். இந்த உத்தரவையும் மீறி பயணிகளிடம் உரிய கட்டணத்திற்கு அதிகமாக கட்டணம் அறவிடும் பஸ்களின் வீதி போக்குவரத்து அனுமதி பத்திரம் ரத்து செய்யப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தில் நுகர்வோரை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் மோசடிமிக்க வர்த்தகர்களுக்கு எதிராக கடும் சட்ட நட்வடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுற்றிவளைப்புகளை மேற்கொள்வது குறித்து நுகர்வோர் சேவை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். சந்தைகளில் பொருள்களை கொள்வனவு செய்யும் தருணத்தில் அவதானமாக செயற்படுமாறும் அமைச்சர் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# சுகாதாரத்தைப் பாதிக்கும் வகையிலான பொதி உணவுப் பயன்பாட்டுக்கு ஜீலை முதல் தடை

கொழும்பு, ஏப்.6

சுகாதாரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துதல், உணவுகளின் தன்மை பாதிப்பு மற்றும் தரத்தில் மாற்றங்கள் ஏற்படுதல் ஆகியன காரணமாக பொதியிடப்பட்ட உணவுப் பொருள்கள் பயன்பாடு எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதியுடன் அமுலுக்கு வரும்வகையில் தடைசெய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

உணவு தொடர்பான ஆலோசனை குழு, உணவு மற்றும் பொதியிடப்பட்ட உணவுகள் குறித்த பணிப்புரைகளை விடுத்துள்ள நிலையில், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் நுகர்வுப் பாவனைக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய பொதியிடப்பட்ட உணவு வகைகள் தடை செய்யப்படவுள்ளன. எதிர்வரும் ஜுலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் உணவுப்பொருட்களும், பொதி உலர் உணவுகளும், பொதியிடல் நிபந்தனைகளுக்கு புறம்பாக இறக்குமதி செய்தல், உற்பத்தி செய்தல், எடுத்துச் செல்லல், விற்பனைக்காக காட்சிப்படுத்த தடை செய்யப்படும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# நாடு முழுவதும் 25 வைத்தியசாலைகளில் விளையாட்டு வீரர்களுக்குத் தனிப்பிரிவு

கொழும்பு, ஏப்.6

விளையாட்டு வீரர்களுக்காக நாடெங்குமுள்ள 25 பிரதான அரசவைத்தியசாலைகளில் விசேட சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன் முதற்கட்டமாக கொழும்பு, தேசிய வைத்தியசாலையில் இந்தச் சிகிச்சைப் பிரிவு எதிர்வரும் மே முதலாம் திகதி முதல் இயங்கவுள்ளது.

விளையாட்டு வீரர்கள் தடை செய்யப்பட்ட போதைமருந்துகளை உட்கொள்வது போன்றவை இந்தச் சிகிச்சை முகாம்கள் மூலம் பெருமளவு கட்டுப்படுத்தப்படும்

இவ்வாறு தெரிவித்தார் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

சுகாதார அமைச்சில் அண்மையில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இந்த விசேட சிகிச்சைப் பிரிவுகளில் விளையாட்டு வீரர்களுக்கு சீ.டீ மற்றும் ஸ்கேன் பரிசோதனைகள் இலகுவாக வழங்கப்படும். தேசிய மட்டத்தில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு உபாதைகள் இந்த முகாம்களில் கவனிக்கப்படும்.

இதுவரை விளையாட்டுத்துறை அமைச்சில் இயங்கும் சிகிச்சை முகாமில் மட்டுமே இந்த விசேட சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

விசேட வைத்திய நிபுணர்களும், அவசியமான மருத்துவ உபகரணங்களும் இல்லாமையால் அவர்கள் பல இக்கட்டுகளுக்கு முகம் கொடுத்தனர். இனிமேல் அந்தக்குறை தீர்த்து வைக்கப்படும் - என்றார்.

சுகாதார அமைச்சரின் இந்த நடவடிக்கைக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

# அரச சார்பு சிறுபான்மைக் கட்சிகள் ஓரணியில் நின்று கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்ற வேண்டும்

கொழும்பு, ஏப்ரல் 6

அரசசார்பு தமிழ்க்கட்சிகளும், சிறுபான்மை சுயேச்சைக் குழுக்களும் ஓரணியில் நின்று கொழும்பு மாநகரசபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் பிரிந்து நின்று போட்டியிட்டதால் கணிசமான பிரதி நிதிகளை இழந்து நிற்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கை - இந்திய வம்சாவளி மக்கள் முன்னணியின் தலைவர் முத்தப்பன் செட்டியார் .

அண்மையில் நடைபெற்ற முன்னணியின் அரசியல்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிசபை, மாகாணசபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழ்பேசும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வது காலத்தின் கட்டாயமாகும்.

தலைநகர் கொழும்பில் தமிழ் பேசும் மக்களே அதிகமாகவுள்ளனர். அந்தவகை யில் கூடுதலான தமிழ்பேசும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அவர்களுக்கு முதலமைச்சர், மாநகர முதல்வராகும் வாய்ப்புக்கிட்டும். ஆனால் அந்தவாய்ப்பை நாம் கடந்த 50 வருடகாலமாகத் தவறவிட்டுள்ளோம்.

எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் பெரும் போராட்டம் நடத்த வேண்டிவரும். போராட்டம் நடத்தினாலும் கூட உரிமைகளை மட்டுமல்ல சலுகைகளைப் பெறுவது கூடக் கேள்விக்குறியே.

ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் - இன்றைய ஆட்சி யாளர்களிடமிருந்து எமது மக்களுக்குத் தேவையான கல்வி, விளையாட்டு, தொழில் வாய்ப்பு என்பவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் - அரசசார்பு தமிழ்க்கட்சிகளும், சிறுபான்மை சுயேச்சைக் குழுக்களும் ஓரணியில் நின்று கொழும்பு மாநகரசபைத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டும்.

எமது முன்னணி தமிழ் பேசும் மக்கள் கூட்டணியை அமைக்க ஆர்வமாகவுள்ளது. இது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் பிரபா கணேசன் தரப்புகளுடன் பேச்சு நடத்தவுள்ளோம்.

இத்தகைய புதியதோர் மாற்றத்தை உருவாக்குவதற்கு தமிழ் பேசும் மக்கள் அன்ன வரும் திடசங்கற்பம் பூணவேண்டும் - என்றார்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கப்பணியாளர் ம.நவநீதன் அவர்களின் அன்புத் தந்தை சின்னையா மகாலிங்கம் அவர்கள் 02.04.2011 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் மறைவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(2660)(276)(1)(25)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்- (06.04.2011)



## ஆறுமுகம் வல்லிபுரநாதர்

(சம்பந்தர் - இளைப்பாறிய ஆசிரியர், பிரபல ஜோதிடர்)

யாழ்ப்பாணம், மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் இந்தியாவில் இறைவனடி சேர்ந்தவருமான பொறுமையின் சிகரம் சமூகசேவையாளர் என்று உறவினர்களாலும் நண்பர்களாலும் அழைக்கப்படும் எமது குடும்பத் தலைவர் ஆறுமுகம் வல்லிபுரநாதர் அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (06.04.2011) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உடனடியாக வந்து உதவியவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மற்றும் மின் அஞ்சல் மூலம் இரங்கல் தெரிவித்தோருக்கும் மாலை, மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மேலும் இறுதிக் கிரியைகளில் கலந்து எமக்கு உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்தியா
00918056242849. (3001)(38)

தகவல்:
குடும்பத்தினர்.

## பன்றித்தலைச்சி அம்மனை நாடிவந்த நூற்றுக் கணக்கான காவடிகள்

தென்மராட்சி, ஏப். 6

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் நேற்று முன்தினம் பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். காலை 5 மணி தொடக்கம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த மக்கள் ஆலயச் சுற்றாடலில் பொங்கல்களை மேற்கொண்டனர். பறவைக் காவடிகளும், ஆட்டக் காவடிகளும், பாற் செம்புகளும் அனைத்து வீதிகளாலும் ஆலயத்திற்கு வந்த வண்ணமிருந்தன. நண்பகல் 12 மணி வரை 25 இற்கும் மேற்பட்ட பறவைக் காவடிகளும் 100 இற்கும் மேற்பட்ட ஆட்டக் காவடிகளும் பாற் செம்புகளும் ஆலயத்திற்கு வந்தன. (எ-207)

## தவக்கால ஆற்றுகை

கொழும்புத்துறை, ஏப்.6

திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் உருவான தவக்கால ஆற்றுகையான 'கடவுள் வடித்த கண்ணீர் திருப்பாடுகளின் காட்சி மேடையேற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இந்த நிகழ்வு நடைபெறும்.

வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கும் ஏனைய நாள்களில் மாலை 6.30 மணிக்கும் ஆரம்பமாகும்.

இயேசுவின் போதனை, பாடுகள், மரணம், உயிர்ப்பு போன்ற வரலாறுகளைச் சித்திரிக்கும் பிரமாண்டமான இந்த அரங்க ஆற்றுகையில் 200 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-135)

## வீணியவரையில் விசேட அபிஷேகம்

மாவிட்டபுரம், வீணியவரை இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வரை விசேட அபிஷேகப் பூசைகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை திருக்குளிர்த்தி நிகழ்வும் பொங்கலும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக் கிழமைவருடப் பிறப்புத் தினத்தில் நண்பகல் 12 மணிக்கு விசேட பூசைகள் நடைபெறும்.

இந்த ஆலயத்துக்குப் பக்தர்கள் தமது சொந்த வாகனத்தில் வந்து செல்வதற்குப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றுஆலய பிரதம குரு தெரிவித்துள்ளார். (ம-204)




## A9 வீதியில் காணி தேவை

நாவற்குழி, நுணாவில், மீசாலையை அண்டிய பிரதேசங்களில் A9 வீதியில் 4 பரப்பிற்கு மேற்பட்ட அளவில் காணி தேவைப்படுகிறது. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

தொலை பேசி:
077-3557945, 077-3024293. (சி-15577401)

## தொழிற் பயிற்சியும் வேலைவாய்ப்பும்

★ யாழ்.தனியார்வைத்தியநிலையம் ஒன்றுக்கு உதவித் தாதியர் பயிற்சி பெற விரும்பும் O/L, A/L படித்த பெண் பிள்ளைகள் விண்ணப்பிக்கலாம்

★ அனுபவமிக்க தாதியர் 3 பேர் தேவை.

தொடர்பு-
T.P- 0778730129
முற்பகல் 10 மணிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**MYWay English** இன் ஆசிரியர்,அலுவலர், வங்கியாளர், மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம் கட்டணம் : ரூபா 8000/- மட்டும்

பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6

**உயர்கல்வி மாணவர்களுக்கான சிறப்பு சலுகைக் கட்டணம்**

இம்மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் பயிற்சியில் சேரும் பல்கலைக்கழக மாணவர்கள், GAQ, HNDA, BIT, Academy உட்பட உயர்கல்வி கற்போர் மற்றும் பட்டம் பூர்த்திசெய்தோருக்கு கட்டணம் ரூபா 3000/- மட்டும்

குறிப்பு : பாடசாலைகள் அலுவலகங்கள் வங்கிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட Discount Coupon இனைப்பயன்படுத்தியும் சலுகைக்கட்டணத்தை பெறலாம்

MyWay English 182 - 1/5, Stanley Road, Jaffna
Tel : 021 2229505 077 33 63 456

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் இலங்கைராஜா

(விசேட சுகாதாரக் கவனிப்பாளர், சுகாதார நிலையம், யாழ்.பல்கலைக்கழகம்)



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் இலங்கைராஜா நேற்று முன்தினம் (04.04.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் ஜெகசோதி தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேந்திரன் மற்றும் ஜெயராஜா, சகுந்தலாதேவி, காலஞ்சென்ற ரவிந்திராஜா ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சரோஜினிதேவி மற்றும் நாதன், கமலேந்திரன், வாசுதேவன், மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஜெகன், விஜிதா, றஜிதா, சுஜிதா, சசீந்திரன், அஜந்தா, சஞ்சீவா, ஆகியோரின் சிறிய தந்தையும், பகிரன், டினேஸ், தனுஜா, புவிராஜ், அமல்ராஜ், தனஞ்சையன், சங்கீதா, ஜீவிதா, வினுதா, லக்சிதா ஆகியோரின் மாமனும் நொவிஸ்னர், அபிஷா, சயந்தன் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2011) புதன்கிழமை அவரது கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆசாரியார் வீதி,
கோண்டாவில் மேற்கு. (2987) (19,20)

தகவல்:
இந்திராதேவி(மனைவி),
ஜெகன் (பேரமகன்).

### திருமதி தவமணி கணபதிப்பிள்ளை



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் இல, 131, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலை இருப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தவமணி கணபதிப்பிள்ளை 02.04.2011 சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-பொன்னி தம்பதியரின்மகளும்காலஞ்சென்றவர்களான நாகன் - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் சர்வோதயா வீதி, ஆவரங்காலைச் சேர்ந்த நா.கணபதிப்பிள்ளையின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, ஐயாத்துரை, தம்பிஐயா, இராசதுரை ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தனபாக்கியம், பூமணிதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பாஸ்கரன் (சுவிஸ்), மாலினி (ஜேர்மனி), ஞானசேகரம் (சுவிஸ்), நளினி, (கோண்டாவில்), சுபாசினி (ஜேர்மனி), பிரபாகரன்(சுவிஸ்), சாமினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அன் (சுவிஸ்), சின்னத்தம்பி (ஜேர்மனி), ரவீந்திரன் (சுவிஸ்), ரவி (ஜேர்மனி), சுகந்தி (சுவிஸ்), வித்யா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சாமினி (கிறிஸ்ரீனா), பாவேந்தன் (அலெக்ஸ்), யாளினி (நெயோமி), சிந்துஷன், இலக்கியன், இலக்கியா, செந்தூரன், சுகிர்தன், சாரங்கன், துஷ்யா, தனுஷன், இனியா, ஆரதி, சுஜிதரன், சுபிற்ஷா, கிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (7.04.2011) வியாழக் கிழமைமு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில்கொட்டைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (சி/577348) (19,20)

தகவல்:
பிள்ளைகள்.

# ஞானமுருகன் - சென்.மேரிஸ் அணிகளுக்கிடையே கைகலப்பு

## 10 இற்கும் மேற்பட்டோர் காயம்

வலி.வடக்கு,ஏப்.6

இளவாலை யங்.கென்றீஸியன் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியின்போது ஏற்பட்ட மோதலில் 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

இந்த மோதலைத் தடுக்க முற்பட்ட பொலிஸாரின் வாகனத்தின் மீதும் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இளவாலையில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:-

இளவாலை யங்.கென்றீஸியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும், மயிலங்காடு ஞானமுருகன் விளையாட் டுக் கழகமும் மோதிக்கொண் டன.

போட்டி முடிவடைந்த பின்னர் இரு அணிகளின் வீரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பரஸ்பரம் மோதிக் கொண்டனர்.

இந்த மோதலில் இரு தரப்புக்களிலும் 10 இற்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளானார்கள். இரு தரப்பினரும் எதிர்த் தரப்பினரைக் கலைத்துக் கலைத்துத் தாக்கினார்கள். இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பெரும் களேபரம் ஏற்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு வந்த இளவாலைப் பொலிஸார் மோதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதன்போது பொலிஸாரும் தாக்கப்பட்டதுடன், பொலிஸ் வாகனத்தின் மீதும் கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

எனினும், பொலிஸார் மேற்கொண்ட பெரும் முயற்சியினால் மோதல் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன் தாக்குதலில் ஈடுபட்ட சிலரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அணி ஒன்றின் ஆதரவாளர்களை ஏற்றி வந்த மினி பஸ் ஒன்றின் கண்ணாடிகளும் அடித்து நொருக்கப்பட்டன.

(த-86)



யாழ்.பல்கலைக்கழகத்தின் 2010 ஆம் ஆண்டு விளையாட்டு அடைவுகளையும் சிறந்த பெறுபேறுகளையும் பெற்ற வீர, வீராங் கனைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. சகல துறை வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்ட வித்தியாராணிக்கும் சகலதுறை வீரராகத் தெரிவு செய்யப்பட்ட சிறி ரஜீவனுக்கும் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் விருது வழங்குகின்றார். (த-23)

# அரையிறுதிக்குக் கலைவாணி



யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் கால் இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த வாரம் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகமும் குருநகர் விளையாட்டுக் கழகமும் மோதின.

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வென்று அரை இறுதிக்குத் தகுதி பெற்றது.

இந்தப் போட்டிக்கு மத்தியஸ்தராக அகிலநாயகமும், உதவி மத்தியஸ்தர்களாக கிருபாகரன், தமிழ்ச்செல்வன் ஆகியோரும் கடமையாற்றினர். (ஐ-23)

# உரும்பிராயில் இறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.6

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்.வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம், மென்பந்தாட்டம் ஆகிய போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்றும் நாளையும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெறவுள்ள வலைபந்தாட்ட இறுதியாட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அணியை எதிர்த்துப் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி மோதுகின்றது.

தொடர்ந்து சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி ஒன்று இடம்பெறும். இதில் உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ள உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அணி மோதவுள்ளது.

மென்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் இடம்பெறவுள்ளது. சிறப்பு நிகழ்வாக உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் அணிக்கும் ஆசிரியர் குழாம் அணியினருக்கும் இடையிலான மென்பந்தாட்டப் போட்டியும், யாழ். பல்கலைக்கழக அணிக்கும் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இடம்பெறவுள்ளன என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-23)

# கரம் சுற்றுப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில்

வலி.வடக்கு. ஏப்,6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான கரம் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு;

உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி, பன்னாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மான்ஸ் வித்தியாலயம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை.

(எ-86)

# கல்வியியற் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி

வலி.வடக்கு,ஏப்.6

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெற வுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியும், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரையும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் . (ஒ-86)

# வலிகாமம் கல்வி வலய வலைப்பந்தாட்டம்: போராடிச் சாதித்தது சண்டிலிப்பாய் இந்து

வலி.வடக்கு,ஏப்.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப் பிரிவு வலைபந்தாட்டப் போட்டியில் பெரும் போராட்டத்தின் பின் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் மிகவும் கடுமையாக மோதிக்கொண்டன. எந்த அணி வெற்றி பெறும் என எதிர்வு கூறமுடியாத நிலையில் மிகவும் நெருக்கமாக இரு அணிகளும் விளையாடின.

முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தலா ஐந்து புள்ளிகளைப் பெற்ற நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் உற்சாகத்துடன் களமிறங்கி மோதிக்கொண்டதுடன், அணியின் ஆதரவாளர்களும் கூட மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்கள்.

இரண்டாம் பாதி ஆட்டமும் இரு அணிகளும் ஓர் அணி மற்றைய அணிக்கு சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிக்கும் வகையில் தலா ஆறு புள்ளிகளைப் பெற்று சமநிலையில் போட்டி முடிவடைந்தது.

தலா பதினொரு புள்ளிகளைப் பெற்று சமநிலையில் இரு அணிகளும் காணப்பட்ட நிலையில் வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக மேலதிக நேரம் வழங்கப்பட்டது.

இதன் போது சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 3:1 என்ற புள்ளிகள் கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வெற்றி பெற்று வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(ஐ-86)

# மரியாள் விளையாட்டுக்கழகம் சம்பியன்

கொழும்புத்துறை,ஏப்.6

யாழ்.பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையில் நடைபெற்றுவரும் விளையாட்டுப் போட்டிகளில் இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ். புனித மரியாள் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகியது.

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் புனித மரியாள் அணியை கொழும்புத்துறை ஜெறலைனர்ஸ் அணி எதிர்த்து ஆடியது.

புனித மரியாள் அணி 3:1 என்ற செற்கணக்கில் ஜெறலைனர்ஸ் அணியைத்தோற்கடித்து யாழ்.பிரதேச செயலகப் பிரிவுச் சம்பியனாகியது. இந்தச் சுற்றுப் போட்டியில் 12 கழகங்கள் பங்குபற்றியிருந்தன. (135)


## விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

நாவற்குழி, ஏப்.6

கைதடி நாவற்குழி பிரதேசங்களில் உள்ள இரும்புப் பாலத்தில் அடிக்கடி ஏற்படும் விபத்துக்களைக் குறைக்கப் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வீதிப் பாவனையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

வீதியில் இந்தப் பாலங்கள் இருப்பதால் வேகமாக வரும் வாகனங்கள் கட்டுப்பாட்டை இழக்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது.

'முன்னால் வழுக்கும் தன்மையுள்ள வீதி அமைந்துள்ளது' என்ற குறியீட்டுப் பலகையைப் பொருத்திச் சாரதிகளுக்கு உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-121)




உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்றுவரும் கல்விக் கண்காட்சியை தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். கண்காட்சியை விருந்தினர்கள் பார்வையிடுகின்றனர்.

## தாவடி- மானிப்பாய் ஊடாகத் தினமும் இருவேளை மட்டும் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.6

தாவடி, மானிப்பாய் ஊடாகச் செல்லும் 771 இலக்கப் பேருந்துச் சேவை தினமும் இரு வேளைகள் மட்டுமே சேவையில் ஈடுபடும் என்று போக்குவரத்துச் சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

771 இலக்கப் பேருந்துச் சேவை சீரற்ற வகையில் இடம்பெறுவதால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். இந்தக் கூட்டத்தில் பிரதேச சமூக ஆர்வலர்களால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன் அடிப்படையில் 771 இலக்கப் பேருந்து காலை 8 மணிக்கு மருதனார்மடத்திலிருந்து தாவடி ஊடாக யாழ்ப்பாணமும் பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தாவடி ஊடாக மருதனார்மடம் வரையும் தனது சேவையை வழங்கும் என்று போக்குவரத்துச் சபையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-313)

## மட்டக்களப்பில் சடலம் மீட்பு

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலக்காட்டு வெட்டை காட்டுப்பகுதியிலிருந்து முஸ்லிம் வயோதிபர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலம் மாஞ்சோலைக் கிராமத்தைச் சேர்ந்த மு.சரிபுத்தம்பி என்பவருடையது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

5 பிள்ளைகளின் தந்தையான இவர், சில தினங்களின் முன்னர் மீன்பிடிக்கச் சென்று வீடு திரும்பாமல் உறவினர்கள் தேடி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச் சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர். (204-21)


### எங்கள் அன்புச் செல்வத்தின் 2ஆம் ஆண்டு நினைவுகளில்



அமரர் சற்குணம் சசிகரன் (குட்டி)
(ICRC முன்னாள் உறுப்பினர்)
தம்பகாமம், பளை

அன்னை மடியில்
06.07.1984
ஆண்டவன் அடியில்
29.03.2009

அன்பு மகனே! ஆசை மகனே! குட்டி
நீ சென்று ஆண்டிரண்டானதே
ஆறவில்லை எம் துயரம்
மாறவில்லை எம் கவலை- எங்கள்
செல்வத்தின் ஆத்ம
சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

தம்பகாமம்,
பளை. (3009) (38)
தகவல்:
நிமால் (அண்ணா).

### ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 739 திகதி 04-04-2011

வெற்றி எண்கள்
03 17 46 54 Z (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரு. 14,887,270/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 14,887,270/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 455 | 1,000/= | 455,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 777 | 1,000/= | 777,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 18480 | 60/= | 1,108,800/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8846 | 40/= | 353,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 218963 | 20/= | 4,379,260/= |
| | | மொத்தம் ரு. 7,907,900/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 600957811-2-22 |
| கண்டி | 600958516-4-04 |
| காலி | 600959088-3-03 |
| குருநாகல் | 600941982-0-00 |
| அம்பாந்தோட்டை | 600940978-0-30 |
| பொலன்னறுவை | 600957097-1-11 |
| திருகோணமலை | 600957770-5-25 |
| அநுராதபுரம் | 600945609-8-18 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,307,900/=
இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரு. 15,477,700/=
செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 ஏப்ரல் 07 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, புலோலி தெற்கில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் கூடிய 26 பேர்ச் காணி விற்பனைக்குண்டு. இக் காணி யாழ்-பருத்தித்துறை மெயின் வீதியில் கிராமக் கோட்டுச் சந்திக்கருகாமையில் அமைந்துள்ளது. ஒரு பேர்ச் காணியின் விலை இரண்டு இலட்சம்.

தொடர்பு: ரூபி ராஜசூரியர்
தொ.பே: 0779625949

### T.V கள் மலிவு விற்பனை

புதிய, பாவித்த, Sony wega Flat 21",25",29" T.V க்கள், DVD என்பன மிக மலிவு விலையில் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0771393670, 0778449829
இ.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி)
சீனிப்புளியடி [ஆரம்பப் பாடசாலை அருகில்], K.K.S வீதி, இணுவில்

### பாரதி பதிப்பகம் பதவி வெற்றிடம்

* இயந்திர இயக்குநர்கள்
Machine Minders
* புத்தகம் கட்டுநர்கள்
Book Binders

இந்தத் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களும், பயிலுநர்களும் வேண்டும்.

இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
### இன்று மட்டும் 06.04.2011



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அழகிய சல்வார் மற்றும் கொட்டன் சாறிகள் Cotton Saree என்பன

சாவகச்சேரியில்
மாபெரும் மலிவு விற்பனை

இடம்: கலா காமென்ட்
16 A, கண்டி வீதி, சாவகச்சேரி
(கொமர்ஷல் வங்கி, அருகில்)

நேரம்: காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை

5000 இற்கும் அதிகமாகக் கொள்வனவு செய்தால் 800/- பெறுமதியான With பிளவுஸ் கொட்டன் சாறி Free

(48,21,23)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
கதிரவேலு மார்க்கண்டு
(ஓய்வுபெற்ற உப அதிபர், கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)

தோற்றம்:
21.08.1925

மறைவு:
07.03.2011

எமது குடும்பத் தலைவரின் மறைவினால் துயருற்றிருந்த வேளையில் பல்வேறு வழிகளிலும் ஆறுதல் அளித்தோருக்கும் நினைவஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர், தொலைபேசி ஊடாகவும் நேரில் வந்தும் ஆறுதல் அளித்த உள்ளங்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (06.04.2011) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரசடி, கோப்பாய் வடக்கு. (39-20-23) குடும்பத்தினர்.

## உவகையுடன் வாழ்த்துகின்றோம்

பேராசிரியை கலாநிதி

**செல்வி வசந்தி அரசரத்தினம்**



உலகத்தினர் போற்றும் வளமிகு கல்வியின்
உயர் யாழ். பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்கு நின்
உன்னத பணியின் பயனாக உயர் பதவிகளில் ஒன்றான
மருத்துவ பீடாதிபதி பதவி உனைத் தேடி வந்து
உயர்வு கண்டாய் உள்ளரும் பணியினை மதித்த
உத்தம பல்கலைக்கழக ஆணைக்குழு உயர் பதவியான
துணை வேந்தராக உயர்த்தி வைத்துப் பெருமை சேர்த்தது
உளமறிந்து வழங்கிய உயர் பதவிக்கு
உன்னுயர்வான சேவையினால் ஒளிபெற
உரிமையுடனும் உவகையுடனும் வாழ்த்துகின்றோம்.

நான்காம் ஒழுங்கை,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தா.கனகசிங்கம் குடும்பம்,
வ.சுரேஸ்குமார் குடும்பம்.

(சி/574839) (38-19)

### ஆன்மீகச் சொற்பொழிவு

சின்மய மிஷன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்வுகள் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை முதல் காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெறவுள்ளன. "ஆன்மீகம் காட்டும் வாழ்க்கை முறை" எனும் தலைப்பில் இடம்பெறும் இந்த ஆன்மீகச் சொற்பொழிவு எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கும் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 8 மணிக்கும் மறு நாள் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கும் இடம்பெறும். இந்த ஆன்மீகச் சொற்பொழிவை யாழ்.வதிவிடத்துறவி பிரமச்சாரி ஜாக்கிரத் சைத்தன்யா சுவாமிகள் நிகழ்த்தவுள்ளார். (த-313)

**Computer Express**
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma in Microsoft Office 1000/= 3 Months
Diploma in Desktop Publishing 1000/= 4 Months
Diploma in Web Page Designing 1000/= 3 Months
Diploma in Graphic Designing 1000/= 4 Months
Diploma in Hardware Engineering 1000/= 3 Months
Diploma in Auto CAD 1000/= 3 Months
Diploma in Computer Science 1000/= 4 Months
Honors Diploma in Computer Science 1000/= 3 Months

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

25/03/2011ந் திகதி முதல் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

Batch I - 06.04.2011-9AM or 3PM
Batch II - 08.04.2011-9AM or 3PM
Batch III - 09.04.2011-11AM or 2PM
Batch IV - 10.04.2011-11AM or 2PM

15.04.2011 திகதிக்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Diploma in Graphic Designing Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Video Editing
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கம்பனிக்கணக்குகளை உள்ளடக்கி முன்னணி Accounting Software களினூடாக
Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Book + MYOB (5 User)
Tally Accounting Package
Tally Date மாற்றலாமா?? முடியும்.....
Course Fee - 1000/=
ஆரம்பம் : 09-04-2011 10-04-2011 2PM

## தேவை

கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு உரிய அனுபமினிய பிற்றிங், கண்ணாடி அலுமாரிகள் உடன் தேவை.

தொடர்புகள்:
021 321 2850, 0772388457, 0776145305.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இராசையா
**லோகநாதன்**
(ஜே/ 129 கிராம சேவையாளர், சுதுமலை வடக்கு)



சிவசம்பு
**பாலசுப்பிரமணியம்**
(ஜே/ 183 கிராம சேவையாளர், உடுவில் தெற்கு)

அண்மையில் கிராம சேவையாளர் தரம் 1 இற்கு பதவி உயர்வு பெற்ற இரண்டு கிராம சேவையாளர்களையும் மன மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களது பணி மேலும் சிறக்க இறையருளை வேண்டுகின்றோம்.

நாவலர் சனசமூக நிலையம்,
சுதுமலை.

## யாழ்.மாவட்ட சி.க.கூ.சங்கங்களின் சமாச விசேட பொதுக்கூட்டத் திகதி மாற்றம்

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தினால் 09.04.2011 ஆம் திகதி சனிக்கிழமை நடத்த முடியவில்லை.

இந்தக்கூட்டம் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக 16.04.2011 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்பதனை அங்கத்துவ சங்கங்களுக்கு அறியத் தருகின்றோம்.

செயலாளர்,
யாழ்.மா.சி.க.கூ.சங்கங்களின் சமாசம்,
637, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

(39-20)

## மாணவரிடையே வினாடி வினாப் போட்டி

யாழ்ப்பாணம்,ஏப்.6

விவசாயபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட மாணவர்களிடையே விஞ்ஞான வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இது பாடசாலை மட்ட ரீதியாகவும் தனிப்பட்ட ரீதியாகவும் நடத்தப்படவுள்ளது. இரண்டு கட்டமாக நடத்தப்படவுள்ள இப்போட்டியில் முதற் கட்டமாக பொது அறிவு எழுத்துப் பரீட்சையும் இரண்டாம் கட்டமாக வாய்மூலமான வினாவிடைப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் இருந்து தலா ஐந்து மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியும் என்று யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

### மயிலு கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர், நெடுங்கேணி)

கெருடாவில், தொண்டமானாறைப் பிறப்பிடமாகவும் கரவெட்டி மேற்கை வதிவிடமாகவும் கொண்ட மயிலு கணபதிப்பிள்ளை 04.04.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலு-ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா- பாறுபதி தம்பதியரின் அன்பு மரு மகனும் இரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி) அன்புக் கணவரும், வசந்தி (ஆசிரியை, கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை), இராமச்சந்திரன், சுதர்சன் (அமெரிக்கா), சிறீதரன் (லண்டன்), இளமுருகன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான துரையப்பா, அன்னப்பிள்ளை, கந்தசாமி மற்றும் செல்லபாக்கியம் (கொழும்பு), பொன்னுத்துரை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இராஜேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), விக்னேஸ்வரி (சசி), துஷ்யந்தி (மதுரா), துஷ்யந்தி ஆகியோரின் மாமனும் நயனி, சிர்ஜெய், டினோஜன், ஜஸ்விந்த், அக்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.04.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வசந்தம்',
அரசடி குறுக்கு வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

தகவல்:
இராஜேஸ்வரன்
(ராசு-மருமகன்)

(39-19-24)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.மாவட்ட சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைப் பேரவை 'மனித மேம்பாட்டுக்கு அனைத்துச் சமயங்களும்' என்னும் தொனிப்பொருளில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் இந்து மதம் சார்பாக பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயரும் பௌத்த மதம் சார்பில் வண. மீககயந்துரே ஸ்ரீ விமலதேரரும் கிறிஸ்தவ மதம் சார்பில் வண.து.து. ஜெயக்குமாரும் இஸ்லாம் மதம் சார்பில் மௌலவி பி.ஏ.எஸ்.சுபியானும் உரையாற்றவுள்ளனர். (ம)

## சமாந்தரப் பயணம்; தொடரும் அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

வீதியில் சமாந்தரமாகச் சென்ற நால்வருக்கு யாழ்.நீதிமன்றம் 2ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது. நேற்று யாழ். நகரில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸார் வீதியில் சைக்கிளில் சமாந்தரமாகச் சென்ற நால்வரைக் கைது செய்து யாழ்.நீதிமன்றில் அஜர்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா தலா 500 ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ம-9)

## யாழ். கிங்ஸ் உணவகத்தின்

காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, கொத்து ரொட்டி, நூடில்ஸ் வகைகளை சுவைத்து விட்டீர்களா?

தரம், சுவைமிக்க மட்டின் றோல்ஸ், மீன் கட்லட், கறிரொட்டி, கோழி இறைச்சிச் சாப்பாடு, கணவாய்ச் சாப்பாடு, ஆட்டிறைச்சிச் சாப்பாடு, (ஃ)பிறைட் றைஸ், நூடில்ஸ், டெவில்ட் சிக்கின் போன்ற உணவு வகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே உணவகம் கிங்ஸ்.

ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கிங்ஸ் - உணவு, மகிழ்ச்சி மற்றும் ஓர் இனிய நேரம்!

137, பலாலி வீதி,
திருநெல்வேலி.
021 2227661

[42-19-24]

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

பொதுக் கூட்டம் (ஓராண்டு நிறைவு)

காலம்: 22.04.2011 வெள்ளிக்கிழமை மு.ப.10 மணி
இடம்: பாடசாலை அருணாசலம் மண்டபம்

* கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் இருப்பின் எமக்கு அனுப்பி வைக்கவும்.
* புதிய அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் பாடசாலை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**அங்கத்தவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

திரு. அ.கயிலாயபிள்ளை
தலைவர்.

திரு. யோ.ஜெயக்குமார்
செயலாளர்.

# இலங்கை அணிக்கு நாடாளுமன்றில் வாழ்த்து

கொழும்பு, ஏப்.06

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்துக் கொடுத்த இலங்கை அணிக்கு நேற்று நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் வாழ்த் துகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

ஆளும் கட்சியின் சார்பில் ஆளும் கட்சியின் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தனவும், எதிர்க்கட்சியின் சார்பில் ஜோன் அமரதுங்கவும் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (ஒ-சி)


## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை வன்னித்தம்பி (காட்டர்)

(Retd.Railway Head Guard)



புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வன்னித்தம்பி நேற்று செவ்வாய்க்கிழமை (05.04.2011) இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம் பிள்ளை - சின்னக்குட்டிபிள்ளை தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான வன்னியசிங்கம் - நன்னிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் இரத்தினம் அம்மாவின் அன்புக் கணவரும் சிவபூசமலர், புனிதவதி, சாரதாதேவி, திருமலர், மகாலட்சுமி, காலஞ்சென்ற கங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநாவுக்கரசு, நாகேந்திரம், தவரத்தினம், ஜெகதீசன், தனபாலசிங்கம், ஜெயந்தி ஆகியோரின் மாமனாரும் கலைமகள், அறிவுச்செல்வன், பாலமுருகன், பிரவீனா, வாசுகி, சுஜீவன், சிறிகாயத்ரி, ஞானகணேசன், சுவர்ணா, ராஜி, அனந்தன், சுகந்தன், சிற்சக்தி, சிற்சபேசன், கணதீபன், சர்வதனன், சுபராம், கஜராம், சோபிகா, தாமோதரன், ரகுராம் ஆகியோரின் அன்புப் பேரனும் அறிவு ஆதித்தன், அறிவு அரங்கன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.04.2011) புதன் கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் விலங்கன் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
0212241113 (3022)(31)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.


# குருநகர் யுவதி ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.6

தீக்காயங்களுடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் யுவதி சிகிச்சை பலனின்றி நேற்று மரணமானார்.

குருநகரைச் சேர்ந்த றா. லக்ஷி (வயது -22) என்பவரே மரணமானவர் ஆவார்.

விசாரணைகளின் போது யுவதி தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை சைக்கிளில் சென்ற மாணவியை மோட்டார் சைக்கிளில் சென்றவர் மோதியதினால் காயமடைந்த மாணவி வட்டுக்கோட்டை கோட்டைக்காடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று முற்பகல் 10.15 மணியளவில் வட்டுக்கோட்டையில் இடம்பெற்ற இந்த விபத்தில் யோ. விதுஷா (வயது-16) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (ஒ-4)

# இருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.6

கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக படிவங்கள் பூரணப்படுத்திக் கொண்டிருக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)


## தொழிற் பயிற்சிகள்

சுயமாகத் தொழிலை ஆரம்பிப்பதற்கும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களில் தொழில்நுட்பத்துறையில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் ஏற்ற முறையில் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

* Electronics : றேடியோ, TV, VCR, DVD, CD Player, Ampliter Receiver திருத்தும் முறை அடிப்படையிலிருந்து பயிற்சியளிக்கப்படும். காலம்: 10 மாதம்
* Mobile Phone Repairing : சகல Phone களினதும் Hardware, Software பழுதுகள் திருத்தும் வகையில் பயிற்சியளிக்கப்படும். காலம்: 3 மாதம்

ஏயர் கொண்டிசனிங் : சகல குளிர்சாதனங்களில் ஏற்படுகின்ற பழுதுகள் திருத்தும் முறை AC பொருத்துதல், சேவிஸ் செய்தல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 6மாதம்

எலக்ரிக்கல் வயறிங்: வீட்டு மின் சுற்று வேலைகள், மின்சாரப்பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும். காலம்: 3 மாதம்

றிவைண்டிங்: மின்மோட்டார், ரான்ஸ்போமர், டைனமோ, Fan றிவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும் காலம்: 5மாதம்

Computer Hardware Engineering காலம்: 3மாதம்

பயிற்சிகள் ஆரம்பம்
09.04.2011 9.30 am

**Jaffna Technical Institute**

No.45, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.0718561654, 0214913297

கிளை : NEW ASIAN CENTER
No.56/15B,ஸ்ரான்லி வீதி
(சம்பத் வங்கி அருகில்.)
யாழ்ப்பாணம்.
T.P.0779254078

குறிப்பு : இம்முறை யாழ்.மாவட்டம்தவிர்ந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.



## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சக ஆசிரியை திருமதி டெ. நாகேந்திரன் அவர்களின் பாசமிகு தாய்



### திருமதி பவளம் நாகமணி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ திருக்குடும்பக் கன்னியர்மடம்,

(41,19,23)



## மரண அறிவித்தல்

### செல்வி குமாரசாமி திலகவதி



அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் இல.24 சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி குமாரசாமி திலகவதி 04.04.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி- நல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற வரதாம்பிகை மற்றும் குகானந்தன், சிவானந்தன், வடிவாம்பிகை, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராஜரட்ணம் மற்றும் சிவப்பிரகாசம், அருளானந்தம், உமாதேவி, விஜயலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் மாலினி, ராகினி, சரவணபவன், தயாபரன், பிரதீபன், புனிதன் ஆகியோரின் சிறிய தாயும், சீராளன், மாசிலன், மேனகா, கார்த்தி ஆகியோரின் அன்பு மாமியும், அபிராமி, சபேசன், மாதங்கி, மதுவந்தி, விசாகன், வாஸந்தி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2011) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24, சபாபதிப்பிள்ளை வீதி,
சுன்னாகம்.
T.P: 0770761572

தகவல்
குகானந்தன், சிவானந்தன்,
அருளானந்தம்

(41,21,23)



## மரண அறிவித்தல்

### இராமுப்பிள்ளை சோமசுந்தரம்

(Retired Customs Officer)



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை சோமசுந்தரம் 02.04.2011 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும் முருகானந்தன் (Australia), சுகந்தி, அமிர்தி (Canada), கீதா, குகானந்தன் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி (Australia), சிவஜோதி, புவனேந்திரா (Canada), சிவதேவி (U.K) ஆகியோரின் அன்பு மாமனாரும், வஞ்சிக்குமரன், வனப்பிரியவாசினி, திராகுலன் (Canada), ஹரினி (Australia), ரக்ஷயன் (Australia), திவானி (U.K) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (06.04.2011) புதன் கிழமை பி.ப 2 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பொரளைகனத்தை, இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 70, 2/2, பாமன் கடை வீதி,
கொழும்பு - 06,
தொ.பே:-2365094,
0777219209,
0773467254. (சி/577288)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.





## ஈராண்டு நினைவினிலே.....!

அமரர்

### சின்னையா புலேந்திரன்

(ஓய்வு நிலை இ.போ.ச. சாரதி)

பிறப்பு 01.10.1940 — இறப்பு 12.04.2009

ஆலமரமாய் அன்புக் கரம் விரித்தவரே!
ஆண்டவன் அழைப்புக்கு செவிசாய்த்தவரே
ஆறாது இன்னும் அரற்றுகின்றோம் – உம் நினைவில்
அப்பா.... என்னும் போதே
இரு விழிகளும் நீர் சொரிந்திடுதே
ஈரமற்ற காலன் இருதய நோய் வடிவிலே
எங்களிடமிருந்து இழுத்து எடுத்தானோ?
ஈராண்டு ஓடிவிட்டன – எம்
ஈரவிழியும் ஈரமிளக்கவில்லையே....

உங்கள் ஆத்மா இறைவனடி சேர இறைஞ்சுகின்றோம் என்றென்றுமே.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம். (3020)(31)



## முதலாம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்

*என்னிடம் நம்பிக்கை கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான் (யோ:11:25)*

மண்ணில் 07 ★ 05 ★ 1961



விண்ணில் 06 ★ 04 ★ 2010

### செபஸ்தியாம்பிள்ளை அமிர்தநாயகம்

எமதருமை அப்பாவே............
எம்மையும் அம்மாவையும் பிரிந்து
ஆண்டொன்று ஆனதப்பா
உமைப் பிரிந்து எம் குடும்பம்
களையிழந்து போனதப்பா
எம் வாழ்வின் வழிகாட்டியே
எம் உயர்வுகளைக் காண
நீங்களில்லையே
இதயம் கண்ணீர் வடித்தாலும்
ஏதோ வாழ்கின்றோம்
நம்மோடு இருப்பது
உங்கள் நினைவுகள் மட்டுமே......

உங்கள் ஆத்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

இன்று (06.04.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

புலோப்பளைகிழக்கு,
பளை. (3018)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### சூசைப்பிள்ளை றேமன்ட் ஜெயப்பிரகாசம்

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

யோவான் 11:25

அப்பா உங்கள் நினைவுகளை எங்கள் உள்ளங்களில் பதித்து விட்டு உங்கள் உடலை மட்டும் மண்ணுக்குள் புதைத்து விட்டோம் உங்கள் ஆன்மா சாந்தி அடைய தினமும் இறைவனை வேண்டுகிறோம்.

என்றும் கண்ணீருடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

82,1/5, ஹம்டன் லேன். வெள்ளவத்தை.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு நாடு திரும்பிய சம்பந்தன், நாடாளு மன்றில் நேற்று உள்ளூராட்சி அதிகார சபை கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த விடயம் தொடர்பாகப் பல தடவைகள் நடைபெற்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல ஆலோசனை களையும், திருத்தங்களையும் முன்வைத்தது.

தமிழ் மொழியும் - சிங்கள மொழியும் அரச கரும மொழிகள் என அரசமைப்பில் உணர்த் தப்பட்டுள்ளன. ஆனால், அரசின் செயற்பாடு கள் அரசமைப்பையே உதாசீனப்படுத்துவது போல் அமைந்துள்ளன. இன்றைச் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டத் திருத்தங்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பு இல்லை. அவசர அவ சரமாக முதலில் ஆங்கிலத்தில் சமர்ப்பிக்கப்பட் டது. பின்னர் சிங்கள மொழிபெயர்ப்பு மட்டும் வழங்கப்பட்டது. தமிழ்மொழி பெயர்ப்பு இல்லாத ஒரு சட்டத் திருத்தம் செல்லுபடி யாகுமா என்பதை நீதிமன்றம்தான் தீர்மானிக்க வேண்டும். என்னைப் பொறுத்தமட்டில் தமிழ் மொழிபெயர்ப்பு இல்லாத ஒன்று பூரணப் படாத ஒன்றுதான்.

இதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டி யது சபாநாயகரின் பொறுப்பு. தமிழ்மொழி பெயர்ப்பு அவசியம் இல்லை என்று அரசு கூறுகின்றதா? இதில் தலைமைக்கும் அக் கறை இல்லை. உங்களுடைய புறக்கணிப்பை நாம் மட்டுமல்ல, முழு உலகமுமே அவ தானித்துக் கொண்டிருக்கிறது.

உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர் பான நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தின்போது, மாவட்ட, தேசிய மட் டத்திலான எல்லை நிர்ணய ஆணைக்குழுக் களில் சகல இன மக்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும்,

மாவட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர்களை தேசிய மட்டத்திலான ஆணைக்குழுவே நியமிக்க வேண்டும் என் றும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், திருத்தங்களில் மாவட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைச்சரினால் நியமிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே அரசு அளித்த சகல வாக்குறுதிகளும் காற்றில் பறக்க விடப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் அமைச்சர்கள் வாய் மூலம் அளிக்கும் விளக்கங்களையும் வாக் குறுதிகளையும் ஏற்க முடியாது. பூரண ஜன நாயகத்தை சூழ்ச்சியான வழியில் பயன் படுத்துவதை நாம் அனுமதிக்க முடியாது.

உள்ளூராட்சி சபைகளே ஜனநாயகத்தின் ஊற்றாகும். அங்கிருந்துதான் அமைச்சர்களும் ஜனாதிபதியும் உருவாக்கப்படு கின்றார்கள். ஜனநாயகம் கிராமங்களில்தான் பிறக்கின்றது.

எனவே, ஆலோசனைக் குழுவில் உறுதி யளிக்கப்பட்ட விடயங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்ட திருத்தங்கள் தமிழ் மொழி யில் அச்சிடப்படும்வரை இந்த விவாதத்தைப் பிற்போடும்படி கேட்டுக் கொள்கிறேன். - என்று சம்பந்தன் கூறினார். (உ-சி)

## உதயனை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு எதிர்க் கட்சியினரிடம் இருந்தும் ஏனைய ஊடகவியலாளர்களிடம் இருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பவே ஆளும் தரப் பினர் பின்வாங்கினர். நாங்கள் உதயன் செய்தியாளரை வெளியேற்றுவோம் என்று சொல்லவில்லை; பத்திரிகையைத்தான் வெளியேற்றுவோம் என்று சொன்னோம் என்றனர்.

பத்திரிகையாளர்களை கூட்டத்தில் இருந்து வெளியேற்றினால் வீதியில் இறங் கிப் போராடுவோம் என்று கூறினர் உறுப் பினர்களான விந்தன் மற்றும் பரஞ்சோதி, ராஜதேவன் ஆகியோர்.

"சபையின் ஊழல்கள், முறைகேடுகள் குறித்து அறிய உதயனிடம் ஏன் போகிறீர் கள். எங்களிடம் வாருங்கள் முழுமையான ஆதாரங்களுடன் அனைத்தையும் தெரியப் படுத்துகிறோம்" என்றும் அவர்கள் ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்குச் சவால் விட்ட னர். (உ-07)

## தமிழர் பகுதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இடங்களிலும் -

அம்பாறை மாவட்டத்தில் நாவிதன் வெளி, கஞ்சிக்குடிச்சாறு, திருக்கோவில், தம்பிலுவில் ஆகிய இடங்களிலும் இந்தத் தேடுதல்கள் இடம்பெற்றன.

அத்துடன் வீடுகளில் வசிப்போரின் விப ரங்கள், புதிதாக வந்துள்ளவர்களின் விபரங் கள், முன்னாள் போராளிகள், மாவீரர்களின் விவரங்களையும் படையினர் திரட்டினர்.

தேடுதலுக்கான காரணம் என்னவென்று தெரிவிக்கப்படவில்லை. இது தொடர்பில் திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரியிடம் தொடர்புகொண்டு கேட்ட போது, இராணுவத்தினர்தான் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதில் பொலிஸார் சம்பந்தப்படவில்லை - என்றார்.

கிழக்குப் படைகளின் தளபதி மேஜர் ஜென ரல் பொனிபஸ் பெரேராவின் உத்தரவின் பேரில் ஆயிரக்கணக்கான படையினர் குவிக்கப் பட்டு இந்தத் தேடுதல்கள் நடத் தப்படுவ தாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரி விக்கின்றன.

ஆயினும் இது ஒரு பாதுகாப்பு ஒத்தி கையே என்றும், இதையிட்டு பொது மக்கள் பதற்றமடை யத் தேவையில்லை என்றும் படைத் தரப்பு கூறியுள்ளது.

பாதுகாப்பு அச் சுறுத்தல்கள் ஏதும் ஏற்பட்டால் எவ் வாறு நடந்துகொள் வது என்பது பற்றிய ஒரு முன்னேற்பாட்டு நடவடிக்கை யாகவே இந்த சுற்றிவளைப் புத் தேடுதல்கள் இடம்பெறுவதாகவும் அந்த வட்டாரங்கள் கூறியுள்ளன. (உ-ஐ-21)

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேறொன்றும் இல்லை" என்றார்.

கடந்த ஆண்டில் இலங்கையில் குறிப்பிடத் தகுந்த மாற்றம் நிகழ்ந்தது என்றும் குறிப் பிட்ட அவர் தமிழர்களின் புனர்வாழ்வுப் பணிகளுக்காக இந்தியா பெருந் தொகை யைச் செலவிட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

"தமிழர்கள் சம உரிமையும் மதிப்பும் பெறும் வகையில் அரசமைப்பை மாற்றும் படி நாம் அழுத்தம் கொடுத்து வருகின் றோம்" என்றும் அவர் கூறினார். (உ)

## மாதகலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கடற்படை அதிகாரிக ளும் வந்து சடலத்தைப் பார்வையிட்டனர்.

கடந்த 29ஆம் திகதி சுண்டிக்குளம் கடற் பகுதியில் காணாமல்போன கடற்படையின ருள் ஒருவருடையதாக இருக்கலாமா என்ற சந்தேகத்திலேயே அவர்கள் சடலத்தைப் பார்வையிட்டனர் என்று கூறப்பட்டது. (உ)

## மாநகர சபைக் கூட்டத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான சாட்சியங்கள் அனைத்தும் தங்களிடம் இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் க.விந்தன் தெரி வித்தார்.

அவரது கருத்துக்கு ஈ.பி.டி.பி உறுப்பினர் கள் எதிர்க் கருத்துக்களைத் தெரிவித்துக் கூச்சலிட்டனர். இதனால் இரு தரப்பின ருக்கும் இடையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

ஈபிடிபி தரப்பினர் உதயன் பத்திரிகை யைத் தொடர்ந்து வசை பாடினர். எதிர்க் கட்சியினரோ, உதயன் வெளியிட்ட தக வல்கள் உண்மை என்று நியாயப்படுத்திய துடன் மாநகர சபையில் ஊழல்கள் மட்டுமே இடம்பெறுகின்றன என்பதாகவும் கூறினர். இதனால் கூட்டத்தில் அனல் பறந்தது.

### மிரட்டினார் முதல்வர்

சபையில் குழப்பங்களை ஏற்படுத்தி னால் அனைவரையும் வெளியேற்றுவேன் என்று முதல்வர் மிரட்டிப் பார்த்தார். முடி யாத நிலையில் - நிலைமை கட்டுக்கடங் காமல் சென்றதை அடுத்து - தனது ஆச னத்தை விட்டிறங்கி அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டார்.

உறுப்பினர்கள் அவரைச் சட்டை செய்ய வில்லை. எதிர்க் கட்சியினர் தொடர்ந்தும் ஆளும் தரப்புக்கு எதிரான ஊழல், முறை கேட்டுக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கொண்டிருந்தனர். அதற்குப் பதிலளித்து ஈபிடிபியினரும் கத்திக் கொண்டிருந்தனர்.

ஒரு கட்டத்தில் வெளியில் இருந்த பத் திரிகையாளர்களைத் தனது அறைக்கு வர வழைத்த முதல்வர், வர்த்தகத் தொகுதிக் கட்டட விவகாரத்தில் விதிமுறைகள் எல் லாமே கடைப்பிடிக்கப்பட்டன என்று, அவர்களை நம்ப வைக்க முயன்றார்.

சபை உறுப்பினர்கள் அனைவரும் முத லில் இந்தத் திட்டத்தை ஆதரித்தார்கள் என்றும் இப்போது சொந்த நலன்களுக்காக இதனைப் பிரச்சினையாக்குகிறார்கள் என் றும் தெரிவித்தார். பின்னர் முதல்வர் தனது இருக்கைக்குத் திரும்பினார். அதனை தொடர்ந்து கூட்டம் மீண்டும் ஆரம்பமானது.

உணவு நேரத்தின் பின்னர் மீண்டும் கூட்டம் தொடங்கிய போது, முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பிரேரணைகள் தொடர் பில் ஆராயப்பட்டது.

இதற்கிடையில் ஈபிடிபி உறுப்பினர் மங் களநேசன், முதல்வர் மீதான நம்பிக்கைத் தீர்மானத்தை வாய்மொழி மூலப் பிரேரணை யாக முன்வைத்தார்.

### ஆளும்தரப்பு உறுப்பினர் நிஷாந்தனும் எதிர்ப்பு

இதற்கு எதிராக சபையில் நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை உறுப்பினர்கள் க.விந்தன், பரஞ் சோதி, இராஜதேவன் ஆகியோர் முன்வைத்தனர்.

அந்தப் பிரேரணையில் இருந்து முதல் வர் ஒரேயொரு வாக்கு வித்தியாசத்தில் தப் பிப் பிழைத்தார். ஆதரவாக 8 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் கிடைத்தன.

ஆளும் தரப்பின் சுதந்திரக் கட்சி உறுப் பினரான நிஷாந்தனும் முதல்வருக்கு எதிராக வாக்களித்தார். அதேசமயம் சு.க. பட்டிய லில் போட்டியிட்ட அகில இலங்கை முஸ் லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்று சபைக்கு வருகைதரவில்லை.

ஒன்றரை வருடங்களின் பின்னர் சபை முதல்வர் பதவி முஸ்லிம் ஒருவருக்கு வழங் கப்படும் எனத் தெரிவித்த வாக்குறுதி மீறப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவர்கள் கலந்து கொள்ளவில்லை. அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் களான ரெமீடியஸ் மற்றும் மரிய கொறற்றா ஆகியோரும் சபையில் சமுகமளித்திருக்க வில்லை. எனினும் சபைகலையும் நேரமான 4 மணிக்கு ரெமீடியஸ் அங்கு தலைகாட்டினார். (உ-07)

## மாமியாரை வெட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெட்டப்பட்டு உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் மா.கணேசராசா, யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி எஸ். சிவரூபன் ஆகியோர் நேற்று நண்பகல் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர். துருவித் துருவி தடயங் களை ஆராய்ந்தனர்.

பிரேத பரிசோதனை செய்த பின்னர் சடலத்தை உரியவர் களிடம் கையளிக்குமாறும், பூநகரி வைத்தியசாலையில் பிரேதப் பரிசோ தனையை மேற்கொள்ளலாம் எனவும் பதில் நீதிவான் பணித்தார்.

மாமியாரை கத்தியால் வெட்டியதாக கூறப்படும் மருமக னான கணேசையா காந்தரூபன் (வயது-29) என்ற சந்தேக நபரிடம் பூர்வாங்க விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட நீதி மன்றில் இன்று புதன்கிழமை ஆஜர்ப்படுத்தும்படி பூநகரி பொலி ஸாருக்கு பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:- சந் தேக நபரான கணேசையா காந்தரூபன் என்பவருக்கும் அவரது மனைவிக்கும் இடையில் நேற்றுக்காலை வாய் தர்க்கம் ஏற்பட்டதை அடுத்து திடீரென வீட்டுப்பாவனையில் இருந்த கத்தியை எடுத்து வந்து காந்தரூபன் அவரது மனைவியை தாக்கியுள்ளார் அதனால் அவர் காயத்துக்கு இலக்கானார் அவரின் உரத்த குரல் கேட்டு காந்த ரூபனின் மனைவியின் தாயார் ஓடிவந்து தடுக்க முயன்றுள்ளார். அந்தச் சமயத்திலே கத்திவெட்டுக்கு இலக்காகி உயிரிழக்க நேரிட் டது. கழுத்தின் பின்புறத்தில் முள்ளந்தண்டு பிளவுபடும் அளவுக்கு வெட்டு விழுந்துள் ளது. அவர்களின் வீட்டில் இரத்த வெள்ளத் தில் துடி துடித்து உயிரிழந்தார்.

9 மாதக் கர்ப்பிணியான காந்தரூபனின் மனைவியான நதியா (வயது-22) தலை யிலும் கைகளிலும் கத்திவெட்டு காயங்களு டன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். பதில் நீதிவான் வைத்திய சாலைக்கு சென்று பிரஸ்தாப பெண்ணி டம் விசாரணைகளை மேற்கொண்டார்.

சந்தேக நபரை பூநகரிப் பொலிஸார் உட னடியாக கைது செய்தனர். வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி விதான கமகே, பூநகரி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி சி.ஐ. மனோஜ்ரணகல உள்ளிட் டோர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-14-20)

## இவரைக் காணவில்லை

கச்சாய் வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த

### சங்கரப்பிள்ளை மைத்திரேகி

(வயது-17) என்பவரை 04.04.2011 ஆம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 11 மணியிலி ருந்து காணவில்லை. இவர் பிறவுண் கலர் பாவாடையும் செம்மஞ்சள் நிற மேலங்கி யும் அணிந்திருந்தார். இவரைப் பற்றிய தக வல்கள் அறிந்தவர்கள் 0773000834 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



தகவல்:
வை.சங்கரப்பிள்ளை. (தந்தை)

(சி/577414) (35)

COMPUTER COURSES
Diploma in Computerized Accounting
Tally, Quick Book, Accpac, M.Y.O.B
Diploma in Video Editing
Premiere Pro CS4, particleIllusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,
Diploma in AutoCAD
2D & 3D Modeling
Adv. Dip. in Hardware & Networking
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி Tel.: 021-226 2470
சாவகச்சேரி Tel.: 021-227 0243

## மரண அறிவித்தல்கள்

### தம்பு நடராசா (தம்பித்துரை)

(நீர்வேலி மத்தி வைரவர் கோயில் பூசகர்)



நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாக வும், வதிவிடமாகவும் கொண்ட தம்பித் துரை என அழைக்கப்படும் தம்பு நடராசா 03.04.2011 ஞாயிற்றுக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்- வள்ளிப்பிள்ளை தம்பதிய ரின் மருமகனும், மகேஸ்வரியின் (கண்மணி) அன்புக் கண வரும், கோகிலா, கருணா (பிரான்ஸ்), லோகேஷ் (கனடா), சர்வேஸ்வரி (சொனி-சுவிஸ்), பிருந்தா (ஆசிரியை, புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி), சசிகாந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீகாந்த நாதன் (பிரான்ஸ்), குணசிங்கம் (கனடா), கமலக் கண்ணன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், பிரதீஷ், சபேஷ், சந்தோஷ், சுயந்தன், தீபிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும், வன்னியசிங்கம் (செல்வம்), இராஜ்கண்ணன் ஆகியோரின் வளர்ப்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2011) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவியாகாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

### திருமதி சின்னையா குணபாக்கியம் (சுழிபுரம்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா குணபாக்கியம் நேற்று (05.04.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையாவின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் இலிங்கேஸ்வரிதேவியின் (ஆசிரியை, யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை) அன்புத் தாயும் யோகநாதனின் (Halo Trust) மாமியும் ஜங்கரன், பவித்திரன் ஆகியோரின் அம்மம்மாவும் காலஞ் சென்றவர்களான பாலசுந்தரம், ஞானசுந்தரம், சிவபாக்கியம், நிதிபாக்கியம், இராமசுந்தரம், விவேகசுந்தரம் மற்றும் ஆனந் தசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராமலிங்கம் மாரிமுத்து - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.04.2011) நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பாக்கிய வாசா'
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(3023)(35)

# யாழ். விஞ்ஞான சங்கத்தின் 18ஆவது அமர்வு இன்று முதல் மூன்று தினங்கள் நடைபெறும்

யாழ்ப்பாணம்-ஏப்-06

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 18 ஆவது வருடாந்த மாநாடு இன்று தொடக்கம் மூன்று தினங்களுக்கு யாழ். பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

'விஞ்ஞான அறிவை மேம்படுத்தல், பரப்புதல்,' என்னும் நோக்கங்களைக் கொண்டு வருடா வருடம் நடைபெற்று வரும் இந்த மாநாட்டில் இந்த வருடம் 'எமது பிரதேசத்தில் நிலைகக் கூடிய அபிவிருத்தி' எனும் கருப்பொருளில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.45 மணிக்கு விஞ்ஞான சங்கத்தலைவர் கலாநிதி சி.சிறி சற்குணராஜா தலைமையில் ஆரம்பமாகும் முதல்நாள் மாநாட்டில் பிரதம விருந்தின ராக வாழ்நாள் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம் கலந்து கொண்டு 'இலங்கையில் உயர்நுட்ப தொழில் நுட்பத்தை நிலை நிறுத்துவதிலுள்ள சவால்கள்' தலைப் பில் உரை நிகழ்துவார்.

தொடர்ந்து செயமலர்வுகள் ஆரம்பமாகும் முதலாவது செயமலர்வில் கொழும்பு பல்கலைக்கழக சத்திர சிகிச்சை பேராசிரியர் மன்டிக்கா விஜயரத்ன 'இலங்கையில் குருதிக் குழாய் மற்றும் அங்க மாற்றீட்டுச் சத்திர சிகிச்சை; சவால்களும் வெகுமதிகளும்' எனும் தலைப்பில் 2011ஆம் ஆண்டுக்கான 'பாலசுப்பிரமணியம்' தங்கப்பதக்கத்துக்கான விரிவுரையை நிகழ்த்துவார்.

முற்பகல் 10.30 மணிக்கு பௌதீகவியல் முதுநிலைப் போராசியர் இ.குமாரவடிவேல் தலைமையில் தொடங்கும் இரண்டாவது செயமலர்வில் 'குறைந்த செலவில் கழிவு நீர் பரிகரிப்பதற்கான நிர்மாணிக்கப்பட்ட ஈர நிலங்கள்' எனும் தலைப்பில் தூய விஞ்ஞான பிரிவுத் தலைவர் கலாநிதி மீனா செந்தில் நந்தனன் உரைநிகழ்த்துவார்.

தொடர்ந்து 'வடக்குக்கும் கிழக்குக்குமான நிலைத்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கு இயற்கையே மிகச் சிறந்த தொழிற்பாட்டுக்குரிய முதல்' எனும் தலைப்பில் கலாநிதி ரி.ஜெயசிங்கம் விரிவுரை நிகழ்த்துவார்.

பிற்பகல் 1.15 இக்கு மீண்டும் கூடும் இரண்டாவது அமர்வில் பிரயோக விஞ்ஞானப் பகுதித் தலைவர் கே.தபோதரன் 'நிலையான அபிவிருத்தியில் அமைய செல்லிட தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் பிரயோகம்' எனும் தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'கருவித்திட்ட அமைப்பு, உத்தமப்படுத்தல்; பௌதீக, கணினி விஞ்ஞானம், கணிதம் என்பவற்றின் சங்கமம்' எனும் தலைப்பில் பேராசிரியர் இரத்தின ஜீவன் ஹூல் உரை நிகழ்த்துவார்.

முதல்நாள் இறுதிஅமர்வாக பிற்பகல் 3 மணிக்கு 'எமது சுகத்தை விளங்கிக் கொள்வதற்காக சமூக நிர்ணய காரணிகளுடனான அணுகுமுறை' எனும் தலைப்பில் வைத்தியர் இராஜேஸ்கண்ணன் உரையாற்றுவார். தொடர்ந்து 'மருத்துவப் பார்வையில் அனுசேப கூட்டியம், ஒரு பொது சுகாதார அபாயக் காரணி' எனும் தலைப்பில் வைத்திய நிபுணர் சிவன்சுதன் விரிவுரையாற்றுவார். நாளையும், மறுதினமும், இரண்டாம், மூன்றாம் நாள் அமர்வுகள் இடம்பெறும்.

(ஒ-10)

# சாயி பாபாவின் உடல் நிலை மோசமடைந்து வருகிறது

## 4 மருத்துவக் குழுக்கள் போராட்டம்



அனந்தபூர், ஏப்.06

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் உடல்நிலை தொடர்ந்து கவலைக்கிடமாக இருக்கிறது என அவருக்கு சிகிச்சை அளிக்கும் ஸ்ரீ சத்சாய் மருத்துவக்கழக இயக்குநர் டாக்டர் சபயா நேற்றுக்காலை தெரிவித்தார். பகவான் சத்ய சாயி பாபாவுக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதை அடுத்து அவர் கடந்த 28ஆம் திகதி ஸ்ரீ சத்சாய் உயர் மருத்துவக் கழகத்தில் சேர்க்கப்பட்டார்.

இயக்குநர் டாக்டர் சபயா தொடர்ந்து கூறுகையில் தெரிவித்தவை வருமாறு:-

சாயிபாபாவுக்கு நாங்கள் முடிந்த அளவுக்கு சிறப்பான சிகிச்சையைக் கொடுத்து வருகிறோம். அவரது உடல் உறுப்புகளின் முக்கிய பகுதிகள் போதுமான அளவுக்கு ஒத்துழைக்கவில்லை. நான்கு மருத்துவக் குழுக்கள் அவதைக் கண்காணித்து வருகின்றன என்றார். இதற்கிடையில் சாயிபாபாவின் உடல் நலம் மிகவும் கவலைக்கிடமாக இருக்கும் தகவல் பரவியதை அடுத்து நேற்று புட்டபர்த்தியில் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். பக்தர்கள் அத்து மீறாமல் இருக்க புட்டபர்த்தியில் 144 தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. ஆந்திர மாநில அமைச்சர் கீதா ரெட்டி புட்டபர்த்தியில் முகாமிட்டுள்ளார். புட்டபர்த்தியில் பாதுகாப்புக்காகக் கூடுதல் பொலிஸார் மற்ற மாவட்டங்களில் இருந்து அனுப்பப்பட்டுள்ளனர்.

புட்டபர்த்தியில் சாயிபாபாவின் வாரிசு யார் என்பதில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என ஒரு தகவல் பரவியது. அது வெறும் வதந்தி என்பது பின்னர் தெரிய வந்தது. ஒரு தனியார் தொலைக் காட்சி திட்டமிட்டு இந்தப் பொய்யான தகவலைப் பரப்பியது எனக் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

(ஒ-சி)

# எதிர்க்கட்சிகள் நேற்று அவையில் வெளிநடப்பு

உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் தொடர்பாக அரசு வழங்கிய உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்து, அது தொடர்பிலான விவாதத்திலும், வாக்கெடுப்பிலும் கலந்துகொள்ளாமல் எதிர்க்கட்சிகள் நேற்று சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தன. நாடாளுமன்றில் நேற்று உள்ளூர் அதிகார சபைகள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், குடிசன மதிப்பு திருத்தச் சட்டமூலம் மற்றும் உணவுத் திருத்தச் சட்டமூலம் ஆகியன விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான விசேட ஏற்பாடுகள்சட்டமூலத்தில்சில திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இச் சட்டமூலத்தை ஒருநாள் தாமதித்து நிறைவேற்றுமாறு எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன. எனினும் அரச தரப்பினர் அதனை நிராகரித்தனர். எனவே இந்தச் சட்டமூலத்தின் மீதான விவாதத்திலும், வாக்கெடுப்பிலும் நாம் கலந்துகொள்ளமாட்டோம். வெளிநடப்பு செய்கிறோம் என்று கூறினார். அதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பியும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தன.


## IT LAND

"Total IT Solution Center"
960, K.K.S Road, Kokuvil

வேலையாட்கள் தேவை

கணனி நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை. கணனித்துறையில் அனுபவம் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. ஆண் / பெண் இருபாலாரும் மற்றும் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

1. கணக்காளர் (Cashier)
2. கணனி திருத்துனர் (Computer Hardware Technician)
3. விற்பனை உதவியாளர் (Sales Representative)

தொடர்புகளுக்கு :
IT LAND, K.K.S Road, Kokuvil
TP No : 021 5100166 / 0718618015
Email : jaffnaitland@gmail.com

Our Services........

Computer Sales and Repair, Phone sales and Repair, Software Development, Web Development, Game Zone, Internet Browsing, Video Calling, Photocopy, Printing and Scanning



## INORGANIC CHEMISTRY

Batch II Sat, Sun 6.15 - 7.15 p.m
English Medium
Commence on 09.04.2011

பிரிவு III தமிழ்மொழிமூலம்
இறுதிப் பிரிவு / Wed 3 - 5
ஆரம்பம் - 06.04.2011 Wed 3 pm

By - அன்பு

THE SCIENCE CORNER


## 31ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
18 . 08 . 1952



ஆண்டவன் பாதங்களில்
08 . 03 . 2011

**அமரர் லயன் ஐயாத்துரை இராமச்சந்திரா**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்து எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் ஐயாத்துரை இராமச்சந்திரா அவர்களின் மரணச் செய்தி அறிந்து உடன்வந்து உதவியவர்கள், மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், அஞ்சலி உரையாற்றியவர்கள், தொலைபேசியூடாக, இணையமூடாக அனுதாபம் தெரிவித்தவர்கள், அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்கள், யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த தாதியர், மருத்துவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், இராமஜெயம் மலரை அழகுற அச்சிட்ட ஹரிகணன் நிறுவனத்தினர், இன்னும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (07.04.2011) வியாழக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் கதிரமலைச் சிவன்கோயில், ஸ்ரேசன் றோட், சுன்னாகத்திலுள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

இந்திரமதி இராமச்சந்திரா,
லவ் லேன், உடுவில்,
சுன்னாகம்.

(3021) (37) குடும்பத்தினர்.


## VACANCIES

I. குளிர்சாதனப் பெட்டி (FRIDGE),
குளிரூட்டி (AIR CONDITIONER) என்பன திருத்தவேலை தெரிந்த முன்னனுபவமுள்ளவர்கள்.

II. விற்பனைப் பிரதிநிதிகள் (SALES REP)
விற்பனையாளர்கள் (SALES MAN)
(மின்சார இலத்திரனியல் பொருள்களில் அனுபவமுள்ளவர்கள்) சான்றிதழ்கள் மற்றும் உரிய ஆவணங்களுடன் 8.4.2011 வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் நேரில் வரவும்.

JAFFNA ELECTRICAL (SHOW ROOM)
NO, 141, POWER HOUSE ROAD, JAFFNA.


## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 8.3.2011 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் **சின்னையா தர்மராசா** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.04.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

246, அரசடி றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## Quick Learning Course

## Spoken English with Grammar

Duration 1 Month
Rs. 3000.00

உரையாடட் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற் கமைய **Audio & Video visuals** மூலமாக நடாத்தப்படுகிறது

A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்

திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935

BCHS

18-04-2011
Batch 14 : 09.00 AM - 01.00 PM
Batch 15 : 01.30 PM - 05.30 PM

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.